In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

குருபாதம்

ஒன்பதாம் திருமுறை
திருவிசைப்பா - திருப்பல்லாண்டு

திருமாளிகைத் தேவர்

சேந்தனார்

கருவூர்த் தேவர்

பூந்துருத்தி நம்பி காடநம்பி

கண்டராதித்தர்

வேணாட்டடிகள்

திருவாலி அமுதனார்

புருடோத்தம நம்பி

சேதிராயர்

வெளியீடு : தருமை ஆதீனம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

CENTRE FOR ... STUDIES Puducherry

உ

குருபாதம்

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர்
அருளிச் செய்த

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

(முழுவதும்)

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
27 ஆவது குருமகாசந்நிதானம்
திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
திருவுளப்பாங்கின் வண்ணம்

தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான
திருபுவனம் ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி உடனாகிய ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி
ஸ்ரீ சரபேசுவர சுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகப்
பெருவிழாவில் வெளியிடப்பட்டது.

நாள் : 02.02.2024

ஞானசம்பந்தம் பதிப்பகம் தருமபுரம் ஆதீனம்
மயிலாடுதுறை 609001

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதற்பதிப்பு : 2024
வெளியீடு நாள் : 02.02.2024

இடம் : ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்
திருபுவனம், திருவிடைமருதூர் வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்

பதிப்பகம் : ஞானசம்பந்தம் பதிப்பகம்
தருமபுரம் ஆதீனம்
மயிலாடுதுறை

உரிமை : தருமை ஆதீனம்
பக்கம் : xvi + 82
நூலின் அளவு : டெம்மி (1/8)
தாள் : மேப் லித்தோ (70gsm)
வடிவமைப்பு : தருமை ஒலி, ஒளிப் பதிவகம்.

விலை தனிப்பிரதி : உரு. 50/.
ப.தி. முழுத்தொகுப்பு : உரு. 800/.

பன்னிரு திருமுறை முழுத்தொகுப்பு மூலம் மட்டும்
(எட்டு நூல்கள்) மிகமிக குறைந்த விலையில்
உரு. 800/-க்கு கொடுக்கப்படுகிறது.
இத்தொகையும் மறுபதிப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும்.

நூல் கிடைக்குமிடம்
தருமை ஆதீனம் நூல் நிலையம்
தருமபுரம் அஞ்சல், மயிலாடுதுறை மாவட்டம் - 606 001
தமிழ்நாடு, இந்தியா

அலைபேசி - 98946 82337

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீன குருமுதல்வர்



'திருமுறைகளோதாய் மனமே உனக்கென்ன வாய்'

என்று அருளிய

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம்

திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த

ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
27 ஆவது குருமகாசந்நிதானம்
திருமுறைச் செப்பேடு கண்டருளிய
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

ஆசியுரை

"ஞாலம் நின் புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

ஆசையறாய் பாசம் விடாய் ஆன சிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்

- சிவபோக சாரம்

முழுமுதற் கடவுளாகிய பரசிவத்திற்கு சொருபம், தடத்தம் என்று பதி இலக்கணம் உண்டு. தன்னிலையில் சுட்டொணாத் தன்மையில் சொருபமாகவும், ஆன்மாக்கள் ஈடேற்றம் பெற அருள் காரணமாக ஐந்தொழில் புரிவதற்கு தடத்த வடிவமாகவும் இறைவன் விளங்கு கின்றான். இதனை சிறப்பு, பொது என்பர். தன்னிலை, முன்னிலை, படர்க்கை என்று இறைவன் எங்கும் எப்பொழுதும் நிறைந்து விளங்குவதை "ஒன்றாய், உடனாய், வேறாய் என்ற வகையில் தோத்திர சாத்திரங்கள் காட்டுகின்றன. இதனை "தோடுடைய செவியன்" என்று பெருமானின் அடையாளங்களை சுட்டிக்காட்டியும், "உள்ளம் கவர்கள்வன்" என்று ஒன்றாய் உறைவதையும், "பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே" என்று முன்நின்று அருளுவதையும் முதல் தேவாரத்திலேயே திருஞானசம்பந்தர் பாடி அருளி, பின்னும் "ஈறாய் முதல் ஒன்றாய் ...... வேறாய் உடனானான்" என்றும் காட்டுகின்றார். அருள் வடிவங்கள் குரு, இலிங்க, சங்கமம் என்று மூவகையாகும். ஞானம் வழங்குதல் பொருட்டு குருவுருவாகவும், அற, மறக் கருணை புரிய வேக, போக, யோக வடிவங்களாகவும், அடியார்களை ஆட்கொள்ள சங்கம வடிவமாகவும், திருவேடமாகிய பூதி, கண்டிகை, திருவைந்தெழுத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொரூபமாகவும் சிவபெருமான் விளங்குகின்றான். அவனை நாம் தரிசிப்பதற்கு மூர்த்தி, தலம், தீர்த்தத்தால் சிறப்புடைய திருத்தலங்கள் தோறும் காட்சித்தருகின்றான். அவனை நாம் அடைவதற்கு தடையாக உள்ள ஆசை, முப்பாசம், சினம் என்ற குற்றங்களை நீக்கி எளிதில் இறைவனை பற்றுவதற்குக் காயத்தால் சிவபூசை செய்தும், மனத்தால் திருவைந்தெழுத்தை ஓதியும், வாக்கினால் திருமுறைகளைக் கொண்டு துதித்தும் வழிபடுவதே நல்வாயிலாகும் என்று நமது ஆதி பரமாசாரியார் அருளுகின்றார்கள். "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்று வள்ளுவர் வாக்கும் காட்டுகிறது. இதில் முதல் நிலை திருத்தல வழிபாடு, திருமுறை ஓதுதல் ஆகியவை, அதன் பயனாக சரியை,கிரியை,யோகமாகிய தவமும் தவத்தின் பயனாக ஞானகுருவின் தரிசனம் கிடைக்கும். குருவின் வாயிலாக மந்திர உபதேசமும், சிவஞானமும், சிவபூசையும் வாய்க்கும். இதனானே வீடாகிய முத்தியும், பேறாகிய சித்தியும் பெறற்குரியவாம் என்பதனை,

> **தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்**
> **முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லை களர்**
> **காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி**
> **வாஞ்சியமென் முத்தி வரும்.**

என்று நமது ஆதி பரமாசாரியாரும்,

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு ஒர் வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று வழியடியாரும் அருளியுள்ளார்கள். 'திருமுறையில் தொடங்கினால் திருவடியில் சேரலாம்' என்பதை இதனால் உய்த்துணரலாம்.

திரு - நிலைத்த செல்வம், முறை - திருவை அடையச்செய்யும் நூல்; திருமுறை என்பதாகும். வீடடைதல் நூற்பயனே என்பதும் இலக்கண விதி. திரு என்பது சிவமே ஆம் என்பதை "சிவமே பெருந்திரு எய்திற்றிலேன்" என்று திருவாசகம் காட்டும். "திருநின்ற செம்மையே செம்மை" என்று ஆரூரர் காட்டுகின்றார். திரு என்ற சொல்லிற்கு உண்மை, அறிவு, ஆனந்தம் என்ற மூன்று பொருளும் உண்டு. இதனை சத்து, சித்து, ஆனந்தம் என்று நான்மறை முடிபும் காட்டுகிறது. இதனை உணர்த்தும் திருவுருவே சோமாஸ்கந்த வடிவாகும். திருபுவனத்தில் அமைந்த மூலவர் விமானத்திற்கும் 'சச்சிதானந்த விமானம்' என்று கல்வெட்டுச் சான்று காட்டுகின்றது. உண்மை - இயல், வாய்மை - இசை, மெய்மை - மெய்ப்பாடு என்று மும்மைத் தமிழும் இவ்வகையாகவே அமைந்துள்ளது. "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" என்று அப்பரும், "முத்தமிழ் நான்மறை ஒம்பு தன்மையன்" என்று சம்பந்தரும் , "சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்" என்று திருமூலரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருளியுள்ளனர். அருணைக்கலம்பகத்தில், "நான்மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர்திருத்தேவாரமும் திருவாசகமும்" என்று நமது ஆதீன 'நாவலர்' எல்லப்பர் கூறுகின்றார்.

முத்தமிழும் சங்க காலத்தில் உலகியல் அகப்புறத்தை அறைந்தன. அதன்பின் அறம் உரைத்தன. சமயாசாரியார் காலத்தில் தான் உண்மைப் பொருளை ஓதும் தகையன ஆகியது என்பதை சேக்கிழார், "தமிழ்செய் தவம் நிரம்ப முத்தமிழ்விரகர் சம்பந்தர் திருஅவதாரம் செய்தார்" என்று காட்டுகின்றார். ஆகையினால் பக்தி இலக்கியக் காலமே தமிழின் பொற்காலமாகும். பன்னிரு திருமுறைகளில் பதினொன்றாம் திருமுறை இயற்றமிழாகிய பிரபந்த வகையாகவும், மூவர் தமிழும், திருஇசைப்பாவும் இசைத்தமிழ் வகையாகவும், தொண்டர்ப் புராணம் நாடகத்தமிழாகவும், கோவைத்திருவாசகமும் அருளியல் அகப்புறத்து வகையன, திருமூலர் சொல் சாத்திரமாகவும் அமைந்துள்ளது பெரும் சிறப்பாகும். இவற்றை நீதி நூல்களும் எழுத்தறிவிக்கும் பொழுதே ஓதி உணர்ந்திட வேண்டுமென்று காட்டுகின்றன. "தேவர் குறளும் திருநான் மறை முடிவும் மூவர் தமிழும் முனிமொழியும் கோவை திருவாசகமும், திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்" என்று நல்வழியும், "வில்வம் அறுகுக்கு ஒவ்வா மென்மலர்கள் நால்வர் என்னும் நல்அன்பர் சொற்கொவா நான்மறைகள்" என்று நீதி வெண்பாவும் கூறுகிறது.

திருமுறை என்ற சொல்வழக்கம் பன்னெடுங்காலமாக பயிலப்பட்டு வருகிறது. "சாற்று மெய்ப்பொருள் தரும் திருமுறையினை" என்று சம்பந்தர் புராணத்திலும், "திருமுறை எழுதுவோர் வாசிப்போர்" என்று காழிக்கணநாதர் புராணத்திலும் சேக்கிழார் காட்டுகின்றார். கருவூர் தேவர் திருவிசைப்பாவில் "பந்தமும் பிரிவும் தெரிபொருட்பனுவல் படிவழி சென்று சென்றேறிச் சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி" மும்மலங்களை நீக்கவும் வீடுபேறு அடைவதற்குரிய முறையினை தெரிக்கின்ற பாடல்கள் இவை என்கிறார். இதுபோல் "காமம் சான்ற கடைக்கோட் பனுவல்" என்று கோவையாரை குமரகுருபர முனிவரும் காட்டியுள்ளார். "பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள் சூடுமின் சென்னி வாய் தோத்திரம் சொல்லுமே" என்று திருமூலர், குருவாக எழுந்தருளுகின்ற திருவருட்சக்தியே திருமுறையாகும் என்கிறார். இவ்வாறே "குருவின் திருவுருக் கொண்டு ஆறாத இன்ப சுகாதீதம் நல்கினள் அம்பிகையே" என்று புவனாம்பிகை சதகம் சாற்றுகிறது. ஞானசம்பந்தர் "அரத்துறை அடிகள் தம் அருளை முறைமையாக சொன்ன பாடல்" என்றும், "தமிழ் மாலை பாடுவித்து என் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" என்று அப்பரடிகளும் அருளியுள்ளனர், அவ்வழியே நமது ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமாசாரிய சுவாமிகளும் "திருமுறைகளோ தாய்" என்று காட்டியுள்ளார். ஞானசம்பந்தர் அருள் வரலாற்றிலும், பெருமான் ஆணையிட பெருமாட்டி "திருமுலைப்பால் சுரந்தளித்து" திருமுறை பாடுவித்த அருளிபாட்டை காணலாம்.

தருமை ஆதீனம் 4ஆவது குருமகாசந்நிதானம், அடியார்கள் தங்களுடைய திருவடியில் அர்ச்சித்த மலர்களை திருமுறை ஏட்டின் மீது தரிசிக்கக் காட்டி திருமுறையும் குருவடிவமும் ஒன்றே என்று நிரூபணம் செய்திருக்கின்றார்கள். "ஐந்து பேர் அறிவும்" என்ற பன்னிரண்டாம் திருமுறைப் பாடலின் அனுபவப்பொருளை வினாவியே குமரகுருபரரை தடுத்து ஆட்கொண்டவர்கள்.

சிவபெருமான், மறைத்திறத்தை ஆன்மாக்களின் தகுதிக்கேற்ப உள்நின்று உணர்த்தியும், வேதாகமமாக உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும், பராவு சிவராக எழுந்தருளிய சமயாசாரியார் வாக்கினால் திருமுறைகளாக திருவாய் மலர்ந்தும் அருளியுள்ளான். இவை அனைத்தும் பதிஞானமாகும், பரபோகத்தை உய்க்கச் செய்யவல்லது. இவற்றை 'பரமாப்த வாக்கியம்' என்று மரபுணர்ந்தோர் போற்றுவர். இவற்றின் புடை, சார்பு நூல்களே மற்றவை என்பதால் தருமை ஆதீனம் 26ஆவது குருமணிகள் வேதம் முதலாக ஆகம, புராண, இதிகாச, திருமுறைத்தோத்திர, சித்தாந்தச்சாத்திர, பண்டாரச்சாத்திரம் ஈறாக அனைத்தையும் மரபு மாறாமல் பாதுகாத்திட வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டருளினார்கள்.

இம்மரபு உணராத ஆன்மானந்தவாதியை நிராகரிப்பதற்கு நமது ஆதி பரமாசாரியார் 'முத்தி நிச்சயம்' என்ற நூலில்,

சந்தான நற்குரவர் தக்கோர் பிறர் சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர் - முந்தவே
எந்த முத்தி சித்தாந்தம் என்றார்கள் சைவத்தில்
அந்த முத்தி நிச்சயிப்போம் யாம்

என்று தாபித்து அருளுகின்றார்கள். இதற்கு முத்தி நிச்சயப் பேருரையில் (முதல் திராவிட மாபாடியம்) வெள்ளியம்பலவாண முனிவர் விரிவாக விளக்கம் கண்டுள்ளார் ஆண்டு காண்க.

"கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்" என்று உமாபதி சிவம் காட்டி, பின்னும் முதல் ஏழு திருமுறைகளை வேதத்தின் சாரமான சப்தகோடி மகாமந்திரங்களாகவும், பதினொரு திருமுறைகளை சிவாகமத்தின் முடிவான பஞ்சபிரம்ம சடங்க மந்திர ரூபமாகவும், 'தோடுடைய செவியன்' முதல் 'உலகெலாம்' ஈறாக வகுக்கப்பட்ட பன்னிரு திருமுறைகளை பிரணவ சொரூபமாகவும் விளங்குவதாக,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்த வகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்றாக்கினார்.

மன்னுதமிழ் விரகரெங்கள் காழிவேந்தர் வகுத்தருளால்
அமைத்த திருமுறை ஓர் மூன்றும்
அன்னவகை வாகீசர்முறை ஓர் மூன்றும்
ஆரூரர் உரைத்த திருமுறைய தொன்றும்
துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்
தூய மனு எழுகோடி என்பதுன்னி
தன்னிகரில் திருவருளால் மன்னன் தானும்
தாரணியோர் வீடு பெறுந்தன்மை சூழ்ந்தே.

என்று எடுத்துக்காட்டுகின்றார்.

சிவாகமம் காட்டுகின்றவாறு திருவாசக நூலில் சிவபுராணம் முதற்பகுதியில் வாழ்க ஆறும், வெல்க ஐந்தும், போற்றி எட்டும் என்ற எண்ணிக்கையில் சடங்க, பஞ்ச பிரம்ம, அட்டபுஷ்ப அர்ச்சனை மந்திரமாக அமைந்துள்ள நயத்தைக் காணலாம். திருவாசகப் பாடல் தொகையும் 658 ஆகவே அமைந்துள்ளது.

கபில தேவர் பதினொன்றாம் திருமுறையில், "நூறுஆன் பயன் ஆட்டி நூறு மலர் சொரிந்து நூறா நொடிவதனின் மிக்கதே நூறா உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளேறுடையானைப் பாடலால் ஒன்று" என்று திருமுறை ஓத வேண்டிய கடப்பாட்டை உணர்த்துகின்றார்.

திருமுறைகள் நமக்கு இகபரசுகத்தை அளிப்பவை என்பதனை, "இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே" என்று சுந்தரர் அருளியுள்ளார். திருப்பதிகங்கள்தோறும் திருக்கடைக்காப்பில் பாராயணப் பயன் கூறுவதை திருஞானசம்பந்தர் வழக்கமாகக் கொண்டுள்ளார். அதில் பிணி, நோய், பாவம், பழி, இடர், துயர், கவலை, துன்பம், தீவினை, நல்வினை, தொல்வினை, துரிசு, குற்றம், செற்றம் அனைத்தும் நீங்கும், இதற்கு மறுதலையாக மருந்து, மந்திரம், புண்ணியம், இன்பம், நல்வினை, நலம், வீடு, பேறு, பரிசு, இம்மை, மறுமை, செல்வம் வேண்டியவை அனைத்தும் பெறலாம் என்று காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக "உரை நலமலி ஒருபதும் நவில்பவர் நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள் புகழ்புவி வளர்வழி அடிமையின் மிகைபுணர் தரநல மிகுவரே", "தானுறு கோளுநாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய் ஆனசொல் மாலை யோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே" என்று பாடியதை காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமறையைச் சிச்சிலிபண்டருந்தத்தேடும்
அதுபோல என்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாது ஆற்றெதிரேயோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ்சாற்றும்
கரியை வளைவிக்கும் கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையில் உறக்காற்றும் காணே.

என்று திருமுறைப் பெருமையினை உமாபதி சிவமும் எடுத்துரைக்கின்றார்.

தருமையாதீனத்தில் தான் திருமுறைகள் ஓலைச்சுவடிகளிலும், செப்பேடுகளிலும், கையெழுத்து பிரதியாகவும், பழைய அச்சு இயந்திர பதிப்பாகவும், நவீன கணினியில் செய்த பதிப்பாகவும், மின்னம்பல இணையதள பக்கமாகவும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இன்றைய தலைமுறையினர் பயன்படுத்துவதற்குரிய முறையில் பன்னிரு திருமுறை களையும் பதிநான்கு சித்தாந்தச் சாத்திரங்களையும் உரையோடும் இதன் மூலப் பனுவல்களை 12 மொழிகளில் மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் செய்து கைபேசிச் செயலியாகவும், கைபேசியில் மிகவும் குறைந்த இடத்தை மட்டுமே எடுத்துக் கொண்டு, ஒருமுறை பதிவிறக்கம் செய்தபின், பிறகு இணையதள வசதி இல்லாமலேயே பயில்கின்ற வகையில் வெளியிட்டு இருக்கின்றோம்.

ஆதீனத்தில் பழைய கல்வெட்டுச் செய்திகளுக்கு ஏற்ப இன்றும் பதிகமாக ஓதுகின்ற வழக்கம் இருக்கின்றது. அபிஷேக நேரத்திலே முழு பதிகத்தையும் பண்ணோடு பாடுகின்ற மரபு கைக்கொள்ளப் படுகின்றது. இதுபோலவே ஆதீனத் திருக்கோயில்களில் பழமை மாறாமல் திருவீதிகளில் திருமுறைப் பாராயணம் செய்கின்ற பணி மேற்கொள்ளப் படுகின்றது. எங்கும் இலாத வகையில் தருமை ஆதீனத்திலே தான் திருமுறைப் பாடுகின்ற ஓதுவார்களுக்கு இண்டை சாற்றுதல் என்ற முறைமை செய்யப்பட்டு, அதன் பின்னரே அவர்கள் அங்கே ஓதுவதற்கு அனுமதிக்கப்படுவது சம்பிரதாயமாக உள்ளது.

திருமுறை பாராயணம் செய்வது ஒவ்வொரு சைவ சமயத்தாரின் நித்திய கடமையாகும். நாமும் துறவறம் மேற்கொள்வதற்கு வழி அமைத்தது "எத்தாயர் எத்தந்தை" என்ற தேவாரக் குறிப்பிருந்த தாளாகும். துறவறம் ஏற்றது முதல் நாள்தோறும் ஐந்து திருப்பதிகங்களை ஓதி வருகின்றோம். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நன்நோக்கத்தினால் சீர்காழி குடமுழுக்கு விழாவை முன்னிட்டு 'ஒரு கோடி முறை' திருவெழுகூற்றிருக்கை பதிகத்தினை பாராயணம் செய்ய பணித்தோம், அதற்கு இசைய உலகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் திருப்பதிகப் பாராயணம் செய்தனர். அதன் பயனாக சீர்காழியில் நமது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில் வளாகத்தில் 16.04.2023 அன்று வரலாற்றில் முதல் முறையாக தேவாரம் எழுதியச் செப்புப் பட்டயங்கள் பெருவாரியாக நல்ல நிலையில் கிடைத்துள்ளது திமுறைப் பாராயணத்திற்கு உறுதியாகப் பலன் உண்டு என்பதற்கு இந்நிகழ்வு சான்றாக அமைந்துள்ளது.

திருமுறைப் பாராயணம் செய்கின்றவர்கள் வசதிக்கு ஏற்ப பன்னிரு திருமுறை 18,251 பாடல்களையும் ஒரே புத்தகமாக சீர்காழியில் வெளியிட்டோம். அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க செல்லுமிடமெல்லாம் எடுத்துச் சென்று பாராயணம் செய்யும் வண்ணம் தற்பொழுது ஒரே நூலை எட்டு பிரிவுகளாகப் பிரித்து திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு முழுவதும் ஒரு நூல், திருநாவுக்கரசர் தேவாரம் முழுவதும் ஒரு நூல், சுந்தரர் திருப்பாட்டு முழுவதும் ஒரு நூல், மாணிக்கவாசகர் திருவாசகமும், திருக்கோவை யாரும் ஒரு நூல், திருவிசைப்பா திருப்பல்லாண்டு முழுவதும் ஒரு நூல், திருமூலர் அருளிய திருமந்திரமாலை முழுவதும் ஒரு நூல், பதினொன்றாம் திருமுறை நாற்பது பிரபந்தங்களும் ஒரு நூல், சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் முழுவதும் ஒரு நூல் என்று 3202 பக்கங்கள் கொண்ட தொகுப்பினை திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பஹரேஸ்வர சுவாமி, ஸ்ரீ சரபேஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவில் வெளியிடுகின்றோம். இந்த எட்டு நூல் தொகுதிகளை தருமை ஆதீன ஒளிப்பதிவகத்தில் வடிவமைத்து, தருமையாதீன ஞானசம்பந்த பதிப்பகத்தால் அச்சிட்டு வெளியிடுவதற்கு ஆகும் பெரும்பொருட் செலவினை சென்னை AUTOTECH INDUSTRIES PRIVATE LIMITED, நிறுவனத்தார், தொழிலதிபர் ‘திருப்பணிச்செம்மல்’ திரு.கே.எஸ்.ஜெயராமன், திருமதி.பிருந்தா ஜெயராமன், அவர்கள் குடும்பத்தார் ஏற்றுப் போற்றியுள்ளார்கள். அவர்கள் தருமை ஆதீனத்தின் திருக்கோயில் புனரமைப்புத் திருப்பணிகளில் தொடர்ந்து பங்குகொண்டு வருகிறார்கள். ஆதீன நிகழ்வுகளில் இடைவிடாது கலந்துகொண்டு சிறப்பித்தும் வருகின்றார்கள். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் எல்லா நலன்களும் வளங்களும் பெருக ஆசிர்வதிக்கின்றோம். மெய்யன்பர்கள் இந்த தொகுப்பினை வாங்கி பயன்பெறும் வகையில் மிக குறைந்த விலையில் கொடுக்கப்படுகின்றது. அன்பர்கள் வாங்கி பாராயணம் செய்யவும். திருமுறைகளை இடையறாது நாளும் ஓதுகின்ற அனைவரும் குறைவிலாத பெருவாழ்வு பெற்று உய்ய செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவடிகளை சிந்திக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

- ஸ்ரீ சம்பந்தசரணாலயர்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் குலத்திலே சுப்பிரமணியப் பிள்ளைக்கும் மீனாட்சியம்மைக்கும் அருந்தவ மகவாக அவதரித்தார் குருஞானசம்பந்தர். மதுரையம்பதிக்குத் தம் பெற்றோருடன் சென்று குலதெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டார். திருவருளால், பொற்றாமரைக் குளத்தின் ஈசானமூலையில் பெட்டகக் கோயிலுடன் சொக்கநாதர் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப் பெற்றார். சொக்கேசன் அருளால் திருவாரூர் சென்று ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரை வணங்கிச் சிவஞான உபதேசம் பெற்றார்; சொக்கநாதர் பூசையும், எழுந்தருளச் செய்து கொடுக்கப்பெற்றார். குருவாணைப்படித் தருமபுரத்தில் ஞானபீடத்தை நிறுவி பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசம் செய்து சைவ சித்தாந்தத்தைப் பரவச்செய்தார்.

ஸ்ரீ சொக்கநாதர் மீது சொக்கநாத வெண்பாப்பாடித் துதித்தார். சிவபோகசாரம், முத்தி நிச்சயம். சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை சோடசகலாப்பிராசாத சட்கம், திரிபதார்த் தருபாதி தசகாரிய அகவல், நவரத்தினமாலை ஆகிய நூல்களையும் அருளி இவ்வாறு பல்லாண்டுக்காலம் ஞான அரசாட்சி புரிந்து சிவலிங்கத் திருவுருவின் கீழ் சீவசமாதி கூடினார் ஸ்ரீகுருஞான சம்பந்தர். அவர் சீவசமாதி கூடிய குருமூர்த்தமே தற்பொழுது ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்கி வருகிறது. கி.பி. 16ம் ஆம் நூற்றாண்டில் ஸ்ரீகுருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற இத்தருமையாதீனத் திருமடம் மொழித்தொண்டும் சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகின்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தரது பரம்பரையில் தற்பொழுது 27 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்பதாம் திருமுறை அருளிய ஆசிரியர்கள் வரலாறு

சைவத் திருமுறைகள்பன்னிரண்டில் ஒன்பதாம் திருமுறையாக வழங்கப்படும் நூல் இரண்டனுள் திருவிசைப்பாவும் ஒன்று. பிறிதொரு நூல் திருப்பல்லாண்டு. திருக்கோயில்களிலுள் சைவர்களின் நாள் வழிபாட்டிலும் ஓதப்பெறும் பஞ்ச புராணத்துள் இந்நூல் மூன்றாவதாக அமைந்தது.

இந்நூலின் பழம் பெயர் 'திருவிசைப்பாமாலை' திருமுறை கண்ட புராணத்தில் வரும் 'மோகமெறி திருவிசைப்பாமாலை முறையொன்று' என்ற தொடர் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. திருவிசைப்பா என்பதற்கு 'இறைவன் புகழ்பாடும் பாமாலைகளின் தொகுதி' என்றும். 'தெய்வத் தன்மை பொருந்திய இசைப்பாமாலை' என்றும் இருவகையாகப்பொருள் கூறுவர்.

1. திருமாளிகைத் தேவர்

திருவிசைப்பாவைப் பாடிய ஆசிரியர்களுள் முதலாமவர் திருமாளிகைத்தேவர். இவர் தில்லையைப்பற்றி நான்கு பதிகங்கள் பாடியுள்ளார். இவர் திருவாவடுதுறையில் இருந்த போகரிடம் சீடராகஇருந்து தீட்சை பெற்றவர் என்பர். திருவாவடுதுறையில் நமசிவாயமூர்த்திகளின் அருகே திருமாளிகைத் தேவர் ஆலயம் உள்ளது.

இவர் ஒருமுறை காவிரிக்குச் சென்று நீராடித் திரும்புங்கால் இறந்த சவம் ஒன்று எதிர்ப்பட, அதனால் தொடக்குறா வண்ணம் கணநாதனை வேண்ட அச்சவம் உயிர்பெற்றெழுந்தது. இவர் தவவலிமையால் அழகு பெற்று மிளிர்வதைக்கண்டு மங்கையர் பலர் இவரைப் போன்ற புதல்வர்களை அடைய, இதனால் ஊரில் அலர்எழ, அச்செய்தியை அறிந்த அரசன் நரசிங்கன் உண்மையறியாது இவருடன் எதிர்க்க, இவர் கோயில் மதில்களில் உள்ள சுதை நந்திகளை உயிர்ப்பித்து அவ்வரசன் மீது ஏவினார். ஒருமுறை தில்லையில் நின்ற திருத்தேரை வடமின்றி ஓடச் செய்தார். திருமாளிகைத் தேவரின் இவ்வற்புதச் செயல்களைத் திருவாவடுதுறைப் புராணம் கூறுகிறது.

இனி, திருவீழிமிழலைக்கோயில் கல்வெட்டில் காணப்படும் 'இத்திருக்கோயிலில் உள்ள திருமாளிகைத் தேவர் என்னும் சயந்தன் இராசஇராசன் காலத்தில் விளக்கு வைத்தார்' எனவரும் தொடரைக் கொண்டு இவரும், ஒன்பதாம் திருமுறை ஆசிரியருள் பிறிதொருவரான சேந்தனாரும் ஒருவரே என்பர் சிலர். ஆயினும் சேந்தனார் பாடிய திருப்பதிகங்கள் தனியே திருமாளிகைத் தேவர் பாடல்களை அடுத்துக் காணப்படுவதாலும், சேந்தனார் பாடிய பாடல்களின் இறுதியில் 'சேந்தன்' என அவர் பெயர் தெளிவாகக் காணப்படுவதாலும் இன்ன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிற காரணங்களாலும் இருவரும் ஒருவரல்லர் என்பது பெரும்பாலோ ருடைய கருத்து.

2. சேந்தனார்

ஒன்பதாம்திருமுறையில் உள்ள. திருவிழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்னும் மூன்று தலங்களுக்குத் திருவிசைப்பாவும் தில்லைக்குத் திருப்பல்லாண்டும் இவர் பாடியுள்ளார்.

இவர் தலங்கள் தோறும் சென்று, இறைவனை வழிபடுவதையே தம் தொழிலாகக் கொண்டிருந்தார் என்றும், இங்ஙனம் நிகழ்ந்துவரும் நாளில் ஒருமுறை இவர் தில்லைக்கு வந்திருந்தபோது அங்குள்ள திருத்தேர் ஓடாமல் நிற்கவே, இவர் 'திருப்பல்லாண்டு' பாடி ஓடாத திருத்தேரை ஓடச்செய்தார் என்றும் கூறுவர்.

இவர் இராசஇராசன் காலத்தில் (கி.பி. 985 - 1014) வாழ்ந்தவர் பெரும்பாலோர் கருத்து.

திவாகர நிகண்டு இயற்றிய திவாகரனைப் போற்றிய சேந்தனார், வீரசோழியம் இயற்றிய பொன்பற்றிக் காவலன் புத்த மித்திரனாம் சேந்தன், பட்டினத்தடிகளின் தலைமைக் கணக்கர் சேந்தனார் ஆகிய இம்மூவரினும் வேறுபட்டவரே திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார். சிலர் இத்திருமுறை அருளிய சேந்தனாரையே பட்டினத்தடிகளின் தலைமைக் கணக்கர் எனக் கூறுவர். இவரது ஊர் செப்புறை என்றும், திருவீழிமிழலை என்றும் கூறுவர்.

3. கருவூர்த் தேவர்

கருவூரில் பிறந்து கருவூர்த் தேவர் எனப் பெயர் பெற்று விளங்கும் இம்முனிவர் இயற்றிய திருவிசைப்பாப் பதிகங்களே பிறர் பாடியவற்றிலும் மிகுதியான எண்ணிக்கையுடையவை. இவர் கோயில். திருக்களந்தை, ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராச இராசேச்சுரம், திருவிடைமருதூர் ஆகிய பத்துத் தலங்களுக்கும் திருவிசைப்பாப் பாடல்கள் பாடியுள்ளார்.

இவர் போகருடைய மாணவர் என்பர், நெல்லைத் தல புராணத்தில் இவர் பெயரால் அமைக்கப்பட்ட 'கருவூரார் சந்நிதி' கோயிலில் இன்றும் உள்ளது. நெல்லைத் தலபுராணத்தில் மட்டுமின்றிக் கருவூர்த் தல புராணத்திலும் இவர் 'கருவூர்ச் சித்தர்' என்ற பெயரால் குறிப்பிடப் பெறுகின்றார். இக்கருவூர்ச் சித்தர் அகத்தியருடன் இருந்ததாகக் கருவூர்ப் புராணம் கூறுவதையொட்டி, கருவூர்ச் சித்தரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவூர்த்தேவரும் வேறுவேறானவர் என்று கொள்வாரும் உண்டு. தஞ்சை இராச இராசேச்சுரத்துள் சிவலிங்கப் பிரதிட்டை செய்வதில் இவர் உதவினார் என்பர். இவர் இராசேந்திரன் எடுப்பித்த கங்கைகொண்ட சோழீச்சரத்தைப் பாடியுள்ளமையால், இவரை இராசேந்திரசோழன் காலம் (கி.பி.1014 - 1044) வரை இவர் காலமாக அறியப்படுகிறது.

4. பூந்துருத்தி நம்பி காட நம்பி

இவர் திருப்பூந்துருத்தியில் வாழ்ந்தவர். நம்பி காட நம்பி என்பது இவர்இயற்பெயராகலாம். திருப்பூந்துருத்தியை அடுத்து திருவையாற்றில், முதலாம் இராசாதி இராசன் காலத்துக் கல்வெட்டொன்றில் 'ஆத்ரேய கோத்திரத்து நம்பிகாட நம்பி' எனவரும் தொடர் இவரையே குறிப்பிடுவதாகக் கருதுவர். எனவே இவர் ஆத்திரேயகுலத்தினர் என்றும், இவர் முதலாம் இராசாதிஇராசன் (கி.பி.1018 1054) காலத்தவர் என்று கொள்வர். காடவர் கோன் என்று கூறப்படுவதை யொட்டி இவர் பல்லவர் மரபினர் என்று கொள்வாருமுண்டு.

இவர் பழுத்த சிவநேசச் செல்வர். தலங்கள்தோறும் சென்று இறைவனது பொருள்சேர் புகழினை விரித்துரைப்பதே இவர்பணி கண்ணப்பர், நாவுக்கரையர், சம்பந்தர், சேரமான் பெருமாள், நம்பியாரூர் ஆகிய அருளாளர்களைத் தம் பதிகத்துள் புகழ்ந்து பாடியுள்ளார். பிறர் பாடாத சாளரபாணி என்னும் பண்ணில் இவர் பாடியிருப்பதைச் சிறப்பாகக் குறிப்பிடுவர். கோயில், திருவாரூர் என்னும் இரண்டு திருவிசைப்பா பதிகங்களை பாடியுள்ளார்.

சுந்தாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் வெள்ளானை மீது மனிதவுடம்புடன் சென்றதாக இவர் பாடியுள்ள பகுதி இரண்டாம் இராச இராசன் கட்டிய தாராசுத்துக் கோயில், கற்ப இல்லின் புறச்சுவரில் சிற்பமாக இருப்பதைக் கூறி, எனவே இவர் இரண்டாம் இராச இராசன் காலத்தில் (கி.பி.1146-1178) வாழ்ந்தவராகலாம் என்று சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

5. கண்டராதித்தர்

இவர் முதற்பராந்தகச் சோழனின் இரண்டாவது மகனார். இவர் கி.பி.950-ல் இளவரசுப் பட்டம் பெற்றார். இவருடைய ஆட்சிக்காலம் கி.பி.950-957 ஆகும்.

இவர் சிறந்த சிவபக்தர். 'காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர்கோன் கலந்த ஆரா இன்சொல் கண்டராதித்தன்' என, இவர் தம் பதிகத்துள் தம்மைப்பற்றிக் கூறியுள்ளமையால் இவர் உறையூரிலிருந்தும் தஞ்சையிலிருந்தும் சோழ நாட்டை ஆண்டார் எனலாம். இவர் தமது ஆட்சிக்காலத்தில் காவிரி ஆற்றிற்கு வடக்கே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டராதித்த சதுர்வேதிமங்கலம் என்ற ஊரொன்றை அமைத்தார். இவ்வூர் இன்று உடையார்பாளையம் தாலுகாவில் உள்ளது.

இவர் சோழநாட்டுச் சிற்றரசன் மகளாகிய செம்பியன் மாதேவியை மணந்தார். செம்பியன் மாதேவியும் சிறந்த சிவபக்தி வாய்ந்தவர். மேற்றிசையில் பகைவரோடு போர் நிகழ்த்தி இறந்தமையாலோ, சோழநாட்டிற்கு மேற்கேயுள்ள நாடுகளுக்குத் தலயாத்திரை சென்று வழங்குகின்றது. திரும்பிவராமையாலோ, யாது காரணத்தினாலோ, கண்டராதித்தருக்கு 'மேற்கெழுந்தருளியதேவர்' என்ற பெயர் கோனேரிராசபுரத்தில் செம்பியன் மாதேவி 'கண்டராதித்தம்' என்னும் பெயரில் இறைவனுக்குத் கற்றளியமைத்தார். அங்குக் கண்டராதித்தர் இறைவனை வணங்குவது போன்று ஒரு படிவம் உள்ளது. சிவஞான கண்டராதித்தர்" என்று இவர் குறிக்கப்படுவது இவர் தனிச் சிறப்பைக் காட்டுவதாகும்.

தில்லைக்குரிய திருவிசைப்பாப் பதிகம் ஒன்று பாடியுள்ளார். மின்னாருவம்' எனத் தொடங்கும் அப்பதிகம் பஞ்சமம் என்னும் பண்ணில் அமைந்தது.

திருமுதுகுன்றம் பழமலைநாதர் கோயில் முகப்பில் பெரிய கோபுரத்தை கட்டியுள்ளார். அதற்கு கண்டராதித்தன் வளைவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. புருடோத்தம நம்பி

இவர் பெயரைக்கொண்டு, இவர் வைணவ மதத்தில் பிறந்து சைவ மதத்தைத் தழுவியராகலாம் என்பர், இவர் இயற்றிய திருவிசைப்பாப் பகுதியில்,

"மாசிலா மறைபல வோதுநாவன்
வண்புருடோத்தமன் கண்டுரைத்த
வாசமலர்கள் கொண்டேத்த வல்லார்
மலைமகள் கணவனை அணைவர்தாமே"

எனவருவது கொண்டு, இவர் மறையோதும் அந்தணர் குலத்தினர் என்பர். இவர் பாடியனவாக இன்று நமக்குக் கிடைக்கும் பதிகங்கள் இரண்டு. இவரைப்பற்றிய வேறு செய்தியொன்றும் அறிதற்கியலவில்லை.

7. சேதிராயர்

இவர் திருக்கோவலூரைத் தலைநகராக உடைய சேதிநாட்டு மன்னர் மரபினர் என்பர். இனிச் 'சேதிராயர் என்போர் தென் ஆர்க்காட்டுக் கோட்டத்து வடமேற்குப் பகுதியில் கிளியூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள் என்றும், சேதிராயர் என்ற பட்டப் பெயர் முதலாங் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக்களில் தான் முதல் முறையாகக் காணப்படுகிறது என்றும், எனவே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இச்சேதிராயர் முதற்குலோத்துங்கள் காலத்தவராகவோ அதற்குப் பிற்பட்டவராகவோ இருக்கலாம் என்றும்கூறப்படுகின்றது.

இவர் அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவரான நரசிங்க முனையரையரின் வழித்தோன்றல் என்றும் கூறப்படுகின்றார். 'சேலுலாம் வயல்' எனத் தொடங்கும் 'பஞ்சமம்' பண்ணில் பதிகம் பாடியுள்ளார்.

8. வேணாட்டடிகள்

கேரள நாட்டிற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் இடையிலுள்ள நாடு வேணாடு. இந்நாட்டில் தோன்றிய சிவஞானியே இவர். துறவியாதலால் அடிகள் என்னும் பெயரோடு சார்த்தி வழங்கினர்.

வேணாடு என்பது தென் திருவாங்கூர்ச்சீமை என்றும், அதனை ஆண்ட அரசர் வேணாட்டு அடிகள் எனக் கி.பி.12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றனர் என்றும், சிலர் கருதுகின்றனர். இவர் தில்லைக்குரிய திருவிசைப்பாப் பதிகம் ஒன்று பாடியுள்ளார்.

"நின்றுநினைந் திருந்துகிடந்து எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொரு கால் நினையாது இருந்தாலும் இருக்கவொட்டாய்"

என இவர் இறைவனிடத்துத் தனக்குள்ள இணைபிரியா ஈடுபாட்டை எடுத்துரைக்கின்றார். இவர் பத்தாம் நூற்றாண்டினராகலாம் என்பது பலர் கருத்து.

9. திருவாலியமுதனார்

இவர்சோழநாட்டில் உள்ள திருவாலி என்னும் ஊரினர். இயற்பெயர் அமுதன். இவரும் வைணவராக இருந்து சைவத்தைத் தழுவியவர் என்பர். இவர் தில்லையைப்பற்றிய நான்கு திருவிசைப்பாப் பதிகங்கள் பாடியுள்ளார். திருவிசைப்பாவில்,

"வரைசெய்மா மதில் மயிலையர் மன்னவன் மறைவல திருவால்"

என்றும்,

"அறைசெந் நெல்வான் கரும்பின் அணியாலைகள் சூழ்மயிலை
மறைவல் வாலி"

என்றும் தம்மைக் கூறிக்கொள்வதால் இவர் அந்தண குலத்தினர் என்றும், திருமயிலையில் வாழ்ந்தவராகலாம் என்றும் கூறுவர். இவர் மாயூரத்தில் பிறந்தவர் என்று கூறுவாருமுண்டு.

இவர் காலம் அறிதற்கியலவில்லை. எனினும் முதல் இராசராசன் காலத்திற்கு முந்திய வராகலாம் என்பது சிலர் கருத்து.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்பதாம் திருமுறை

வ. எண்.	பண்	பதிகம் மொத்தம்
1.	பஞ்சமம்	20+1
2.	காந்தாரம்	2
3.	புறநீர்மை	3
4.	சாளரபாணி	1
5.	நட்டராகம்	1
6.	இந்தளம்	1
	மொத்தம்	29

உ

குருபாதம்

பன்னிருதிருமுறை ஆசிரியர்கள்

[1]திருஞான சம்பந்தர் [2]வாகீசர் [3]சுந்தரர்
[4]திருவாத வூரர் மற்றைத்
[5]திருமாளிகைத்தேவர் [6]சேந்தனார் [7]கருவூரர்
தெள்ளு[8]பூந் துருத்தி நம்பி
வருஞான [9]கண்டரா தித்தர்[10]வே ணாட்டடிகள்
வாய்ந்த[11]திரு வாலி யமுதர்
மருவு[12]புரு டோத்தமர் [13]சேதிராயர் [14]மூலர்
மன்னு திரு [15]ஆல வாயார்
ஒரு [16]காரைக் காலம்மை [17]ஐயடிகள் [18]சேரமான்
ஒளிர் [19]கீரர்[20]கல்லாடனார்
ஒண் [21]கபிலர் [22]பரணர்மெயுண [23]ரிளம்பெருமானொடு
ஓங்கும் [24]அதி ராவடிகளார்
திருமேவு [25]பட்டினத் தடிகளொடு
[26]நம்பியாண்டார் நம்பி [27]சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மை யோரே.

புலவர் திரு.வை.தருமலிங்கம் பிள்ளை,
தமிழாசிரியர்,
தருமை ஆதீனத் தேவாரப் பாடசாலை.
தருமபுரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சரபேசுவர சுவாமி



தருமை ஆதீனம்

ஸ்ரீ கம்பகரேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்

திருவிடைமருதூர் வட்டம் - தஞ்சாவூர் மாவட்டம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
குருபாதம்

பன்னிரு திருமுறைப் பதிப்பு
திருப்பணி நன்கொடை

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம்

திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
திருவுளப்பாங்கின் வண்ணம்

திருக்கயிலாயப் பரம்பரை தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

திருபுவனம் அறம்வளர்த்த நாயகி சமேத
ஸ்ரீ கம்பஹரேஸ்வர சுவாமி திருக்கோயில்
ஸ்ரீ சரபேஸ்வர சுவாமி திருக்கோயில்
மகாகும்பாபிஷேக விழாவில்

பன்னிரு திருமுறைகள் எட்டு நூல் பிரிவுகள் 3202 பக்கங்கள் கொண்ட
தொகுப்பினை வெளியிடுவதற்கு ஆகும் பெரும் பொருட்செலவினை

"திருப்பணிச்செம்மல்"

தொழிலதிபர் **திரு.கே.எஸ்.ஜெயராமன்.**

திருமதி.பிருந்தா ஜெயராமன்.

(AUTOTECH INDUSTRIES i PRIVATE LIMITED,Chennai)

அவர்கள் குடும்பத்தார் ஏற்றுப் போற்றியுள்ளார்கள். இவர்கள், தருமை ஆதீன தேவஸ்தான திருக்கோயில் புனரமைப்பு திருப்பணிகளில் தொடர்ந்து பங்குகொண்டு சிவபுண்ணியத்தை செய்து வருவது சிறப்பிற்குரியது.

குறிப்பு

இத்திருமுறை பதிப்பின் விற்பனைத் தொகை மிகக் குறைந்த அடக்க விலையிலே கொடுக்கப்படுகின்றது. இத்தொகை மீண்டும் இத்திருமுறை தொகுப்பினை தொடர்ந்து வெளியிடுவதற்கு பயன்படுத்தப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

திருமாளிகைத் தேவர் அருளியது

1. கோயில் 1
2. கோயில் 4
3. கோயில் 7
4. கோயில் 10

சேந்தனார் அருளியது 13

5. திருவீழிமிழலை 13
6. திருவாவடுதுறை 16
7. திருவிடைக்கழி 19

கருவூர்த்தேவர் அருளியது 22

8. கோயில் 22
9. திருக்களந்தை ஆதித்தேச்சரம் 25
10. திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் 27
11. திருமுகத்தலை 30
12. திரைலோக்கிய சுந்தரம் 33
13. கங்கைகொண்ட சோளேச்சரம் 36
14. திருப்பூவணம் 39
15. திருச்சாட்டியக்குடி 41
16. தஞ்சை இராசராசேச்சரம் 44
17. திருவிடைமருதூர் 47

பூந்துருத்தி நம்பி காடநம்பி அருளியது 50

18. திருவாரூர் 50
19. கோயில் 50

கண்டராதித்தர் அருளியது 52

20. கோயில் 52

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேணாட்டடிகள் அருளியது 55

21. கோயில் 55

திருவாலியமுதனார் அருளியது 56

22. கோயில் 56
23. கோயில் 59
24. கோயில் 62
25. கோயில் 65

புருடோத்தமநம்பி அருளியது 68

26. கோயில் 68
27. கோயில் 71

சேதிராயர் அருளியது 72

28. கோயில் 72

சேந்தனர் அருளிச் செய்த திருப்பல்லாண்டு 74

29. கோயில் 74

பாடல் முதல் குறிப்பு அகராதி 78

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர்

அருளிச்செய்த

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

ஒன்பதாம் திருமுறை

திருமாளிகைத் தேவர் அருளியது

1. கோயில்

பண்: பஞ்சமம் **பதிகஎண்: 1**

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

இடர் கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ஒளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மால்அறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. 2

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா
சாமகண்டா அண்ட வாணா
நற்பெரும் பொருளாய் உரைகலந்து உன்னை
என்னுடை நாவினால் நவில்வான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
தருமை ஆதீனம்

அற்பன்என் உள்ளத்து அளவிலா உன்னைத்
தந்தபொன் அம்பலத் தரசே
கற்பமாய் உலகாய் அல்லை ஆனாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. 3

பெருமையிற் சிறுமை பெண்ணொடுஆ ணாய்என்
பிறப்புஇறப்பு அறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
அப்பனே அம்பலத்து அமுதே
ஒருமையிற் பலபுக்கு உருவிநின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமாறு உரையே. 4

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகா லா காம நாசா
ஆலமே அமுதுண்டு அம்பலம் செம்பொன்
கோயில்கொண்டு ஆடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே. 5

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே. 6

தனதன்நல் தோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநல் தூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனகனே குமர விநாயக சனக
அம்பலத்து அமரசே கரனே
நுனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே. 7

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
அறம்பல திறங்கொண்டு அருந்தவர்க்கு அரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே. 8

தக்கன்நல் தலையும் எச்சன்வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண்(டு) உருள ஒண்திருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே
அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத்து ஆடும்
சொக்கனே எவர்க்கும் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே. 9

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்கு
அருள்புரி வள்ளலே மருளார்
இடங்கொள்முப் புரம்வெந்து அவியவை திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே
அடங்கவல் அரக்கன் அருள்திரு வரைக்கீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்துஎம் விடங்கனே உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே. 10

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டாது
அயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட்(டு) ஓர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையில் பொறுக்கும்அம் பலத்துள்
நிறைதரு கருணா நிலயமே உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே. 11

திருச்சிற்றம்பலம்

2. கோயில்

பதிகஎண்: 2

பண்: பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
ஓமதூ மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத்(து) அகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகள்என் மனத்துவைத் தருளே. 1

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவிதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்னடிக் கீழ(து)என் னுயிரே. 2

வரம்பிரி வாளை மிளர்மடுக் கமலம்
கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெல் கழனிச் செங்கழுநீர்ப்
பழனம்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவர்அடி முறையால்
இறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தரம் முனிவர் நினைதிருக் கணைக்கால்
நினைந்துநின்(று) ஒழிந்ததென் நெஞ்சே. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேர்மலி விழவில் குழலொலி தெருவில்
கூத்தொலி ஏத்தொலி ஓத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில(வு) இலயத் திருநடத் தியல்பில்
திகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரள்மா
மணிக்குறங்(கு) அடைந்ததென் மதியே. 4

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்(கு)
இளங்கமுகு உளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதனம்
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொள்நீர்த் தரளத் திரள்கொள்நித் திலத்த
செம்பொற் சிற்றம்பலக் கூத்தா
பொறையணி நிதம்பப் புலியதள் ஆடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே. 5

அதுமதி இதுவென்(று) அலந்தலை நூல்கற்(று)
அழைப்பொழிந்(து) அருமறை அறிந்து
பிதுமதி வழிநின்(று) ஒழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணும் தேரரும் சேராச்
செல்வச் சிற்றம்பலக் கூத்த
மதுமதி வெள்ளத் திருவயிற்(று) உந்தி
வளைப்புண்(டு)என் னுள்மகிழ்ந் ததுவே. 6

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூல் அகலம்
பெருவரை புரைதிண் தோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு(வு) உதரத் தார்திசை மிடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த
உருமரு(வு) உதரத் தனிவடம் தொடர்ந்து
கிடந்த(து)என் உணர்வுணர்ந்(து) உணர்ந்தே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணியெரி விசிறு கரம்துடி விடவாய்க்
கங்கணம் செங்கைமற் றபயம்
பிணிகெட இவைகண்(டு) அரன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்(து)என் அமுதே
சீர்கொள்சிற் றம்பலக் கூத்த
அணிமணி முறுவல் பவளவாய்ச் செய்ய
சோதியுள் அடங்கிற்(று)என் அறிவே. 8

திருநெடு மால்இந் திரன்அயன் வானோர்
திருக்கடைக் காவலின் நெருக்கிப்
பெருமுடி மோதி உருமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றுப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லன்முப் புரம்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்த
கருவடி குழைக்கா(து) அமலச்செங் கமல
மலர்முகம் கலந்த(து)என் கருத்தே. 9

ஏர்கொள்கற் பகம்ஒத்(து) இருசிலைப் புருவம்
பெருந்தடங் கண்கள்மூன் றுடையான்
பேர்கள்ஆ யிரம்நூறாயிரம் பிதற்றும்
பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள் கொக்கிறகும் கொன்றையும் துன்று
சென்னிச் சிற்றம்பலக் கூத்த
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்தம்
நிகழ்ந்தஎன் சிந்தையுள் நிறைந்தே. 10

காமனைக் காலன் தக்கன்மிக் கெச்சன்
படக்கடைக் கணித்தவன் அல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண்(டு) ஆண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்த
பூமலர் அடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பர்என் புன்சொலின் பொருளே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. கோயில்

பண்: பஞ்சமம் பதிகஎண்: 3

திருச்சிற்றம்பலம்

உறவா கியயோ கமும்போ கமுமாய்
உயிரொளி என்னும்என் பொன்னொருநாள்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா என்னும் மணிநீர் அருவி
மகேந்திர மாமலைமேல் உறையும்
குறவா என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 1

காடாடு பல்கணம் குழக் கேழற்
கடும்பின் நெடும்பகற் கான்நடந்த
வேடா மகேந்திர வெற்பா என்னும்
வினையேன் மடந்தைவிம் மாவெருவும்
சேடா என்னும் செல்வர்மூ வாயிரம்
செழுஞ்சொதி அந்தணர் செங்கைதொழும்
கோடா என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 2

கானே வருமுரண் ஏனம் எய்த
களியார் புளினநற்கா ளாய்என்னும்
வானே தடவும் நெடுங் குடுமி
மகேந்திர மாமலை மேலிருந்த
தேனே என்னும் தெய்வவாய் மொழியார்
திருவாளர்மூ வாயிரவர் தெய்வக்
கோனே என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 3

வெளியேறு பன்றிப் பின்சென்(று) ஒருநாள்
விசயற்(கு) அருள்செய்த வேந்தே என்னும்
மறியேறு சாரல் மகேந் திரமா
மலைமேல் இருந்தமரும் தே என்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெறியே என்னும் நெறிநின்ற வர்கள்
நினைக்கின்ற நீதி வேதாந்த நிலைக்
குறியே என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 4

செழுந்தென்றல் அன்றில்இத் திங்கள் கங்குல்
திரைவீரை தீங்குழல் சேவின்மணி
எழுந்தின்று என்மேல் பகையாட வாடும்
எனைநீ நலிவதென் னேஎன்னும்
அழுந்தா மகேந்திரத்(து) அந்த ரப்புட்(கு)
அரசுக் கரசே அமரர்தனிக்
கொழுந்தே என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 5

வண்டார் குழலுமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத் தின்பின்
கண்டார் கவல வில்லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தாய் என்னும்
பண்டாய மலரயன் தக்கன் எச்சன்
பகலோன் தலைபல் பசுங்கண்
கொண்டாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 6

கடுப்பாய்ப் பறைகறங்கக் கடுவெஞ் சிலையும்
கணையும் கவணும் கைக்கொண்(டு)
உடுப்பாய் தோல்செருப்புச் சுரிகை
வராக முன்னோடி விளியுளைப்ப
நடப்பாய் மகேந்திர நாத நா தாந்தத்(து)
அரையா என்பார்க்கு நாதாந்தபதம்
கொடுப்பாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 7

சேவேந்து வெல்கொடி யானே என்னும்
சிவனே என் சேமத்துணையே என்னும்
மாவேந்து சாரல் மகேந்தி ரத்தில்
வளர்நா யகா இங்கே வாராய் என்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலிய நின்ற
கோவே என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 8

தரவார் புனம்சுனை தாழ்அருவித்
தடம்கல் லுறையும் மடங்கல் அமர்
மரவார் பொழில்எழில் வேங்கை எங்கும்
மழைசூழ் மகேந்திர மாமலைமேல்
சுரவா என்னும் சுடர்நீள் முடிமால்அயன்
இந்திரன் முதல்தே வர்க்கெல்லாம்
குரவா என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 9

திருநீ றிடாவுருத் தீண்டேன் என்னும்
திருநீறு மெய்த்திரு முண்டத்திட்டுப்
பெருநீல கண்டன் திறங்கொண்(டு) இவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்
வருநீர் அருவி மகேந்திரப்பொன்
மலையின் மலைமக ளுக்கருளும்
குருநீ என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 10

உற்றாய் என்னும் உன்னையன்றி மற்றொன்(று)
உணரேன் என்னும் உணர்வுகள் கலக்கப்
பெற்றாய ஐந்தெழுத்தும் பிதற்றிப்
பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன் என்னும்
சுற்றாய சோதி மகேந்திரம் சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சில்
குற்றாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 11

வேறாக உள்ளத்(து) உவகை விளைத்(து)
அவனிச் சிவலோக வேதவென்றி
மாறாத மூவாயிர வரையும் எனையும்
மகிழ்ந்தாள வல்லாய் என்னும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறார் சிகர மகேந்திரத்(து) உன்
அடியார் பிழைபொறுப்பாய் மாதோர்
கூறாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே. 12

திருச்சிற்றம்பலம்

4. கோயில்

பண்: காந்தாரம் பதிக எண்: 4

திருச்சிற்றம்பலம்

இணங்கிலா ஈசன் நேசத்
திருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன்
மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறா வீறில்
கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணா கண் வாய்
பேசாதப் பேய்க ளோடே. 1

எட்டுரு விரவி என்னை
ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங் கலங்கல் தில்லை
வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்
தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணா கண் வாய்
பேசாதப் பேய்க ளோடே. 2

அருட்டிரட் செம்பொற் சோதி
யம்பலத் தாடு கின்ற
இருட்டிரட் கண்டத் தெம்மான்
இன்பருக் கன்பு செய்யா
அரட்டரை அரட்டுப் பேசும்
அழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துணுக்கென அயனும் மாலும்
தொடர்வருஞ் சுடராய் இப்பால்
அணுக்கருக் கணிய செம்பொன்
அம்பலத் தாடிக் கல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச்
சிதம்பரைச் சீத்தை ஊத்தைப்
பிணுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 4

திசைக்குமிக் குலவு கீர்த்தித்
தில்லைக்கூத் துகந்து தீய
நசிக்கவெண் ணீற தாடும்
நமர்களை நணுகா நாய்கள்
அசிக்கஆ ரியங்கள் ஓதும்
ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 5

ஆடர வாட ஆடும்
அம்பலத் தமுதே என்னும்
சேடர்சே வடிகள் சூடாத்
திருவிலா உருவி னாரைச்
சாடரைச் சாட்கை மோடச்
சழக்கரைப் பிழைக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 6

உருக்கிஎன் உள்ளத் துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப் பருளுந் தில்லைச்
செல்வன்பால் செல்லுஞ் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செக்கர் ஒத் திரவி நூறா
யிரத்திரள் ஒப்பாந் தில்லைச்
சொக்கர் அம் பலவர் என்னும்
சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்டாம் மிண்ட
எத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 8

எச்சனைத் தலையைக் கொண்டு
செண்டடித் திடபம் ஏறி
அச்சங்கொண் டமரர் ஓட
நின்றஅம் பலவற் கல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 9

விண்ணவர் மகுட கோடி
மிடைந்தொளி மணிகள் வீசும்
அண்ணல்அம் பலவன் கொற்ற
வாசலுக் காசை யில்லாத்
தெண்ணரைக் தெருளா உள்ளத்
திருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 10

சிறப்புடை அடியார் தில்லைச்
செம்பொன்அம் பலவற் காளாம்
உறைப்புடை அடியார் கீழ்க்கீழ்
உறைப்பர்சே வடிநீ றாடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேந்தனார் அருளியது

5. திருவீழிமிழலை

பண்:பஞ்சமம் பதிக எண்: 5

திருச்சிற்றம்பலம்

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிர்இல்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே. 1

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே. 2

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
மருந்தை என் மாறிலா மணியைப்
பண்டலர் அயன்மாற் கரிதுமாய் அடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூர் ஆளும்
கொண்டலங் கண்டத் தெம்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே. 3

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே. 4

இத்தெய்வ நெறிநன் றென்றிருள் மாயப்
பிறப்பறா இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா தவமும்
அறிவரோ அறிவுடை யோரே. 5

அக்கனா அனைய செல்வமே சிந்தித்
தைவரோ டழுந்தியான் அவமே
புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனைஎண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. 6

கங்கைநீர் அரிசிற் கரைஇரு மருங்கும்
கமழ் பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கைஓர் பங்கத் தென்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனோ இனியே. 7

ஆயிரங் கமலம் ஞாயிறா யிரமுக்
கண்முக கரசர ணத்தோன்,
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேயிருந் தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே. 8

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடிதிண் டோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி எல்லைக்கப் பாலாய்
நின்றைஞ் நூற் றந்தணர் ஏத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர் ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே. 9

தக்கன் வெங்கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரன் இந்திரன் எச்சன்
மிக்கநெஞ் சரக்கன் புரம் கரி கருடன்
மறலி வேள் இவர்மிகை செகுத்தோன்
திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந் தடிமைபூண் டேனே. 10

உளங்கொள மதுரக் கதிர்விரித் துயிர்மேல்
அருள்சொரி தரும் உமா பதியை
வளங்கிளர் நதியும் மதியமும் கூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேஎன்
றாந்தனைச் சேந்தன்தா தையையான்
களங்கொள அழைத்தால் பிழைக்குமோ அடியேன்
கைக்கொண்ட கனககற் பகமே. 11

பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேடலங் காரக் கோலத்தின் னமுதைத்
திருவீழி மிழலையூர் ஆளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத் தேனே. 12

திருச்சிற்றம்பலம்

6. திருவாவடுதுறை

பண்: பஞ்சமம் பதிகஎண்: 6

திருச்சிற்றம்பலம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாள ராயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை
யமுதேயென் றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன்
றருளா தொழிவது மாதிமையே. 1

மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர் புராணனாம்
அணிஆ வடுதுறை நம்பிநின்ற
நீதி யறிகிலள் பொன்னெடுந்
திண்டோள் புணர நினைக்குமே. 2

நினைக்கும் நிரந்தர னேயென்னும்
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுதல் நங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
குனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருணேந்து சேகர னேயெனுந்
    தடம் பொன்னித் தென்கரைச் சாந்தையூர்ப்
பொருணேர்ந்த சிந்தை யவர்தொழப்
    புகழ்செல்வ மல்குபொற் கோயிலுள்
அருணேர்ந் தமர்திரு வாவடு
    துறையாண்ட ஆண்டகை யம்மானே
தெருணேர்ந்த சித்தம் வலியவா
    திலக நுதலி திறத்திலே. 4

திலக நுதல் உமை நங்கைக்கும்
    திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க் கென்னையாட்
    கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன் றறிகின்றி லேமெனும்
    அணியும் வெண் ணீறஞ் செழுத்தலால்
வலதொன் றிலள் இதற் கென்செய்கேன்
    வயல் அந்தண் சாந்தையர் வேந்தனே. 5

வேந்தன் வளைத்தது மேருவில்
    அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
    பொடியாட வேதப்புர வித்தேர்ச்
சாந்தை முதல் அயன் சாரதி
    கதிஅருள் என்னுமித் தையலை
ஆந்தண் திருவா வடுதுறை
    யான்செய்கை யார் அறி கிற்பரே. 6

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்
    கெடுத்தோடிக் கெட்டஅத் தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்
    என்சொல்லிச் சொல்லும் இத் தூமொழி
கற்போல் மனங்கனி வித்தஎம்
    கருணால யாவந்தி டாய் என்றாற்
பெற்போ பெருந்திரு வாவடு
    துறையாளி பேசா தொழிவதே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒழிவொன்றி லாஉண்மை வண்ணமும்
உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
மொழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றிலாச் செல்வச் சாந்தையூர்
அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை யெய்திநின்
றிறுமாக்கும் என்னிள மானனே. 8

மானேர் கலைவளை யுங்கவர்ந்
துளங்கொள்ளை கொள்ள வழக்குண்டே
தேனே அமுதேஎன் சித்தமே
சிவலோக நாயகச் செல்வமே
ஆனேஅலம்பு புனற்பொன்னி
அணிஆ வடுதுறை அன்பர்தம்
கோனேநின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே. 9

குன்றேந்தி கோகன கத்தயன்
அறியா நெறிஎன்னைக் கூட்டினாய்
என்றேங்கி ஏங்கிஅ ழைக்கின்றாள்
இளவல்லி எல்லைக டந்தனள்
அன்றேஅ லம்பு புனற்பொன்னி
அணிஆ வடுதுறை யாடினாள்
நன்றே யிவள்நம் பரமல்லள்
நவலோக நாயகன் பாலளே. 10

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலும் என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காம புராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்கும்நீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ
டானு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. திருவிடைக்கழி

பண்:பஞ்சமம் **பதிகஎண்: 7**

திருச்சிற்றம்பலம்

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே. 1

இவளைவார் இளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான் இளங்காளை
கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்கண் நங்கையாள் நயக்குங்
குழகன்நல் லழகன்நம் கோவே. 2

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்
காவனற்சேனை வயென்னக்காப் பவன் என்
பொன்னைமே கலைகவர் வானே
தேவினற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மண்ணியன் றானே. 3

தானமர் பொருது தானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலஇளங் களிற்றின்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. 4

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற் றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே. 5

கிளையிளஞ் சேய் அக் கிரிதனைக் கீண்ட
ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடைஅரன் மதலை
கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
முளைஇளங் களிறன் மொய்குழற் சிறுமிக்
கருளுங்கொல் முருகவேள் பரிந்தே. 6

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
சுந்தரத் தரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண் டையுறும் வகையே. 7

வகைமிகும் அசுரர் மாளவந் துழிஞை
வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்கென்
துடியிடை மடல்தொடங் கினளே. 8

தொடங்கினள் மடல் என்றணிமுடித் தொங்கற்
புறஇத மாகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
தறுமுகத் தமுதினை மருண்டே. 9

மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க்(கு) அருள்செயா விடுமே
விடலையே எவர்க்கும் மெய் அன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. 10

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூமொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்தசொல் லிவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
எழுங்கதி ரொளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும் மாலுலா மனமே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருவூர்த்தேவர் அருளியது

8. கோயில்

பதிகஎண் : 8

பண் : புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
 கறையணற் கட்செவிப் பகுவாய்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
 பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பின்
 மழைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை அரும்பும் பெரும் பெற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே. 1

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
 ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
 அஞ்சலென் றருள் செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
 கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே. 2

தாயின்நேர் இரங்கும் தலைவஓ என்றும்
 தமியனேன் துணைவஓ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால் இரங்கி
 நலம்புரி பரமர்தம் கோயில்
வாயில்நேர் அரும்பு மணிமுருக்(கு) அலர
 வளரிளம் சோலைமாந் தளிர்செந்
தீயின்நேர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே. 3

துந்துபி குழல்யாழ் மொந்தைவான் இயம்பத்
 தொடர்ந்(து)இரு டியர்கணம் துதிப்ப
நந்திகை முழவம் முகிலென முழங்க
 நடம்புரி பரமர்தம் கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தியின் மறைநான்கு ஆரணம் பொதிந்த
அரும்பெறல் மறைப்பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 4

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்(து)என்
களைகணே ஓலம்என்(று) ஓலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்(து)
என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதென் பாடிநின் றாடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 5

நெஞ்சிடர் அகல அகம்புகுந்(து) ஒடுங்கும்
நிலைமையோ(டு) இருள்கிழித்(து) எழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்(று)ஒளி துளும்பும்
விரிசடை அடிகள்தங் கோயில்
அஞ்சுடர் புரிசை ஆழிசூழ் வட்டத்(து)
அகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுடர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 6

பூத்திரள் உருவம் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரள் பளிங்கில் தோன்றிய தோற்றம்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந்(து) ஓமகுண் டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 7

சீர்த்ததின் புவனம் முழுவதும் ஏனைத்
திசைகளோ(டு) அண்டங்கள் அனைத்தும்
போர்த்ததம் பெருமை சிறுமைபுக்(கு) ஒடுங்கும்
புணர்ப்படை அடிகள்தம் கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆர்த்துவந்(து) அமரித்(து) அமரரும் பிறரும்
அலைகடல் இடுதிரைப் புனிதத்
தீர்த்தநீர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 8

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையும் காட்டி
அன்னைதேன்கலந்(து)இன்அமு(து)உகந்(து)அளித்தாங்(கு)
அருள்புரி பரமர்தம் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகம் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 9

உம்பர்நா(டு) இம்பர் விளங்கியாங்(கு) எங்கும்
ஒளிவளர் திருமணிச் சுடர்கான்(று)
எம்பிரான் நடஞ்செய் சூழல்அங் கெல்லாம்
இருட் பிழம்(பு) அறஎறி கோயில்
வம்புலாம் கோயில் கோபுரம் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனால் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 10

இருந்திரைத் தரளப் பரவைசூழ் அகலத்(து)
எண்ணிலங் கண்ணில்புன் மாக்கள்
திருந்துயிர்ப் பருவத்(து) அறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை
பொருந்தருங் கருணைப் பரமர்தம் கோயில்
பொழிலகங் குடைந்துவண்(டு) உறங்கச்
செருந்திநின்(று) அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. திருக்களந்தை ஆதித்தேச்சரம்

பண்: புறநீர்மை

பதிகஎண்: 9

திருச்சிற்றம்பலம்

கலைகள்தம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத்(து) எனக்கே
முலைகள்தந்(து) அருளும் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்(து)
அலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 1

சந்தன களபம் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடும்
செந்தழல் உருவில் பொலிந்துநோக் குடைய
திருநுதல் அவர்க்கிடம் போலும்
இந்தன விலங்கல் எறிபுனந் தீப்பட்(டு)
எரிவதொத்(து) எழுநிலை மாடம்
அந்தணர் அழலோம்(பு) அலைபுனற் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 2

கரியரே இடந்தான் செய்யரே ஒருபால்
கழுத்திலோர் தனிவடஞ் சேர்த்தி
முரிவரே முனிவர் தம்மொ(டு)ஆல் நிழற்கீழ்
முறைதெரிந்(து) ஒருடம் பினராம்
இருவரே முக்கண் நாற்பெருந் தடந்தோள்
இறைவரே மறைகளும் தேட
அரியரே யாகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 3

பழையராம் தொண்டர்க்(கு) எளியரே மிண்டர்க்(கு)
அரியரே பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுந் தருளாப்
பிச்சரே நச்சரா மிளிரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழையராய் வந்தென் குடிமுழு தாளும்
குழகரே ஒழுகுநீர்க் கங்கை
அழகரே யாகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 4

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம்(பு) அதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல்ஆ டரவம்
துவளுமே கலையும் துகிலுமே ஒருபால்
துடியிடை இடமருங்(கு) ஒருத்தி
அவளுமே ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 5

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்திலம் நிரைத்திலங் கினவே
போலுமே முறுவல் நிறையஆ னந்தம்
பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே என்று
குழைவரே கண்டவர் உண்டது
ஆலமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே 6

திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகும்
திறத்தவர் புறத்திருந்(து) அலச
மைக்கடா அனைய என்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணம் காத்தெனக்(கு) அருளே
புரியவும் வல்லரே எல்லே
அக்கடா ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 7

மெய்யரே மெய்யர்க்கு இடுதிரு வான
விளக்கரே எழுதுகோல் வளையாண்
மையரே வையம் பலிதிரிந்(து) உறையும்
மயானரே உளங்கலந் திருந்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொய்யரே பொய்யர்க்(கு) அடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி இருள்கிழித் தெழுந்த
ஐயரே யாகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 8

குமுதமே திருவாய் குவளையே களமும்
குழையதே இருசெவி ஒருபால்
விமலமே கலையும் உடையரே சடைமேல்
மிளிருமே பொறிவரி நாகம்
கமலமே வதனம் கமலமே நயனம்
கனகமே திருவடி நிலைநீர்
அமலமே ஆகில் அவரிடம் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே. 9

நீரணங்(கு) அசும்பு கழனிசூழ் களந்தை
நிறைபுகழ் ஆதித்தேச் சரத்து
நாரணன் பரவும் திருவடி நிலைமேல்
நலமலி கலைபயில் கருவூர்
ஆரணம் மொழிந்த பவளவாய் கரந்த
அமுதம்ஊ றியதமிழ் மாலை
ஏரணங்(கு) இருநான்(கு) இரண்டிவை வல்லோர்
இருள்கிழிந்(து) எழுந்தசிந் தையரே. 10

திருச்சிற்றம்பலம்

10. திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்

பண்:பஞ்சமம் பதிகஎண் : 10

திருச்சிற்றம்பலம்

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம்(பு) அலம்பச்
சடைவிரித்(து) அலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத்(து) அரும்பித்
திருமுகம் மலர்ந்துசொட்(டு) அட்டக்
கிளரொளி மணிவண்(டு) அறைபொழிற் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துள்நின்றாடும்
மைந்தன்என் மனங்கலந் தானே. 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்
சுழியமும் சூலமும் நீல
கண்டமும் குழையும் பவளவாய் இதழும்
கண்ணுதல் திலகமும் காட்டிக்
கெண்டையும் கயலும் உகளுநீர்ப் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனங்கலந் தானே. 2

திருநுதல் விழியும் பவளவாய் இதழும்
திலகமும் உடையவன் சடைமேல்
புரிதரு மலரின் தாதுநின்(று) ஊதப்
போய்வருந் தும்பிகாள் இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணியம் பலவனைக் கண்(டு)என்
மனத்தையும் கொண்டுபோ துமினே. 3

தெள்ளுநீ றவன்நீ(று) என்னுடல் விரும்பும்
செவியவன் அறிவுநூல் கேட்கும்
மெள்ளவே அவன்பேர் விளம்புவாய் கண்கள்
விமானமேநோக்கி வெவ் வுயிர்க்கும்
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனே என்னும்என் மனனே. 4

தோழியாம்செய்த தொழில்என் எம் பெருமான்
துணைமலர்ச் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி உணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந்(து) உளங்கரைந்(து) உருகும்
கேழலும் புள்ளும் ஆகிநின்றி ருவர்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவும் மாலொழி யோமே. 5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்செய்கோம் தோழி தோழிநீ துணையாய்
இரவுபோம் பகல்வரு மாகில்
அஞ்சலோ என்னான் ஆழியும் திரையும்
அலமரு மாறுகண்(டு) அயர்வன்
கிஞ்சுக மணிவாய் அரிவையர் தெருவில்
கெழுகவும் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவஓ என்று
மயங்குவன் மாலையம் பொழுதே. 6

தழைதவழ் மொழுப்பும் தவளநீற்(று) ஒளியும்
சங்கமும் சகடையின் முழக்கும்
குழைதவழ் செவியும் குளிர்சடைத் தெண்டும்
குண்டையும் குழாங்கொடு தோன்றும்
கிழைதவழ் கனகம் பொழியநீர்ப் பழனம்
கெழுகவும் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தர்தம் வாழ்வுபோன் றனவே. 7

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகம் திருவடி திருநீறு
இன்னகை மழலை கங்கைகோங்(கு) இதழி
இளம்பிறை குழைவளர் இளமான்
கின்னரம் முழவம் மழலையாழ் வீணை
கெழுகவும் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனத்துள்வைத் தனனே. 8

யாதுநீ நினைவ(து) எவரையாம் உடையது
எவர்களும் யாவையும் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பனிமலர்க் கண்ணுள்நின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனம்புகுந் தனனே. 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர்
அழகிய சடையும்வெண் ணீறும்
சிந்தையால் நினையிற் சிந்தையும் காணேன்
செய்வதென் தெளிபுனல் அலங்கல்
கெந்தியா வுகளும் கொண்டைபுண் டரீகம்
கிழிக்கும்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாள் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனே அறியும்என் மனமே. 10

கித்திநின் றாடும் அரிவையர் தெருவில்
கெழுகவும் பலைசெய்க்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனை ஆரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க்(கு) அகலிரு விசும்பில்
முத்தியாம் என்றே உலகர்ஏத்து வரேல்
முகமலர்ந்(து) எதிர்கொளும் திருவே. 11

திருச்சிற்றம்பலம்

11. திருமுகத்தலை

பண்: பஞ்சமம் பதிகஎண்: 11

திருச்சிற்றம்பலம்

புவனநா யகனே அகவுயிர்க்(கு) அமுதே
பூரணா ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க்(கு) இரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன்(று) அருள்புரிந்(து) அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே. 1

புழுங்குதீ வினையேன் விடைகெடப் புகுந்து
புணர்பொருள் உணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முழங்குதீம் புனல்பாய்ந்(து) இளவரால் உகளும்
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
விழுங்குதீம் கனியாய் இனியஆ னந்த
வெள்ளமாய் உள்ளமா யினையே. 2

கன்னெகா உள்ளக் கள்வனேன் நின்கண்
கசிவிலேன் கண்ணில்நீர் சொரியேன்
முன்னகா ஒழியேன் ஆயினும் செழுநீர்
முகத்தலை அகத்தமர்ந்(து) உறையும்
பன்னகா பரணா பவளவாய் மணியே
பாவியேன் ஆவியுள் புகுந்த(து)
என்னகா ரணம் நீ ஏழைநாய் அடியேற்கு
எளிமையோ பெருமையா வதுவே. 3

கேடிலா மெய்ந்நூல் கெழுமியும் செழுநீர்க்
கிடையனா ருடையஎன் நெஞ்சில்
பாடிலா மணியே மணியுமிழ்ந்(து) ஒளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாம் செந்நெல் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை விளைந்து
நீடினாய் எனினும் உட்புகுந்(து) அடியேன்
நெஞ்செலாம் நிறைந்துநின் றாயே 4

அக்கனா அனைய செல்வமே சிந்தித்(து)
ஐவரோ(டு) என்னொடும் விளைந்த
இக்கலாம் முழுதும் ஒழியவந்(து) உள்புக்(கு)
என்னைஆள் ஆண்டநாய கனே
முக்கண்நா யகனே முழுதுல(கு) இறைஞ்ச
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
பக்கல்ஆ னந்தம் இடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. 5

புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயிர் அளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்தவே தகத்தென்
மனம்நெக மகிழ்ந்தபே ரொளியே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முனைபடு மதில்மூன்(று) எரித்தநா யகனே
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
வினைபடும் உடல்நீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. 6

விரியநீர் ஆலக் கருமையும் சாந்தின்
வெண்மையும் செந்நிறத் தொளியும்
கரியும் நீறாடும் கனலும் ஒத் தொளிரும்
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லாம் முரிந்தழ கியையாய்
முகத்தலை அகத்தமர்ந் தாயைப்
பிரியுமா றுளதே பேய்களாம் செய்த
பிழைபொறுத்(து) ஆண்டபே ரொளியே. 7

என்னையுன் பாத பங்கயம் பணிவித்(து)
என்பெலாம் உருகநீ எளிவந்(து)
உன்னைஎன் பால்வைத்(து) எங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே
முன்னைஎன் பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆ ரமுதும்
கனியுமாய் இனிமையாய் இனையே. 8

அம்பரா அனலா அனிலமே புவிநீ
அம்புவே இந்துவே இரவி
உம்பரால் ஒன்றும் அறிவொணா அணுவாய்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொல் மூதறி வாளர்
முகத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
எம்பிரானாகி ஆண்டநீ மீண்டே
எந்தையும் தாயுமா யினையே. 9

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை அகத்தமர்ந்(து) இனிய
பாலுமாய், அமுதாப் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி இணைமேல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலையம் பாகின் அனையசொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவர் எல்லாம்
சிவபதம் குறுகிநின் றாரே. 10

திருச்சிற்றம்பலம்

12. திரைலோக்கிய சுந்தரம்

பண்: காந்தாரம் பதிகஎண்: 12

திருச்சிற்றம்பலம்

நீரோங்கி வளர்கமலம்
நீர்பொருந்தாத் தன்மையன்றே
ஆரோங்கிமுகம் மலர்ந்தாங்
கருவினையேன் திறம்மறந்தின்
றூரோங்கும் பழிபாரா
துன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 1

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 2

அம்பளிங்கு பகலோன்பால்
அடைபற்றாய் இவள்மனத்தின்
முன்பளிந்த காதலும்நின்
முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்த கனியேஎன்
மருந்தேநல் வளர்முக்கட்
செம்பளிங்கே பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மைஞ்ஞின்ற குழலாள்தன்
    மனம்தரவும் வளைதாரா
திஞ்ஞன்ற கோவணவன்
    இவன்செய்த தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம்
    மெய்ஞ் ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 4

நீவாரா தொழிந்தாலும்
    நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தும்
    குவளைமலர் சொரிந்தனவால்
ஆவாஎன்று அருள்புரியாய்
    அமரர்கணம் தொழுதேத்தும்
தேவாதென் பொழிற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 5

முழுவதும்நீ யாயினும் இம்
    மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள்
    பயில்வதும்நின் னொருநாமம்
அழுவதும்நின் திறம்நினைந்தே
    அதுவன்றோ பெறும்பேறு
செழுமதில்சூழ் பொழிற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 6

தன்சோதி எழுமேனித்
    தபனியப்பூச் சாய்க்காட்டாய்
உன்சோதி எழில்காண்பான்
    ஓலிடவும் உருக்காட்டாய்
துஞ்சாக்கண் ணிவளுடைய
    துயர்தீரும் ஆறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரும்பேதைக் கருள்புரியா
தொழிந்தாய்நின் அவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதூவும்
நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலும் உயிரீர்ந்தாய்
நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 8

ஆறாத பேரன்பி
னவர் உள்ளம் குடிகொண்டு
வேறாகப் பலர்சூழ
வீற்றிருந்த அதுகொண்டு
வீறாடி இவள் உன்னைப்
பொதுநீப்பான் விரைந்தின்னம்
தேறாள்தென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 9

சரிந்ததுகில் தளர்ந்தஇடை
அவிழ்ந்தகுழல் இளந்தெரிவை
இருந்தபரி சொருநாள்கண்
டிரங்காய் எம் பெருமானே
முரிந்தநடை மடந்தையர்தம்
முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ வணிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 10

ஆரணத்தேன் பருகிஅருந்
தமிழ்மாலை கமழவரும்
காரணத்தின் நிலைபெற்ற
கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தார் ஈரைந்தும்
போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. கங்கைகொண்ட சோளேச்சரம்

பண்: பஞ்சமம் பதிகஎண்: 13

திருச்சிற்றம்பலம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 1

உண்ணெகிழ்ந்(து) உடலம் நெக்குமுக் கண்ணா
ஓலமென்(று) ஓலமிட்(டு) ஒருநாள்
மண்ணினின்று அலறேன் வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேல்
பண்ணிநின்(று) உருகேன் பணிசெயேன் எனினும்
பாவியேன் ஆவியுள் புகுந்தென்
கண்ணினின்று அகலான் என்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 2

அற்புதத்தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 3

ஐயபொட் டிட்ட அழகுவாள் நுதலும்
அழகிய விழியும்வெண்ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்
தரங்கமும் சதங்கையும் சிலம்பும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மொய்கொள்எண் திக்கும் கண்டநின் தொண்டர்
முகமலர்ந்து இருகணீர் அரும்பக்
கைகள்மொட் டிக்கும் என்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே 4

சுருதிவா னவனாம் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பின்இந் திரனாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கண்
பகவனாம் அகஉயிர்க்கு அமுதாம்
எருதுவா கனனாம் எயில்கள் மூன்(று) எரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 5

அண்டமோர் அணுவாம் பெருமைகொண்(டு) அணுவோர்
அண்டமாம் சிறுமைகொண்(டு) அடியேன்
உண்டஊண் உனக்காம் வகைஎன துள்ளம்
உள்கலந்(து) ஏழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கள் மூன்(று) எரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே 6

மோதலைப் பட்ட கடல்வயி(று) உதித்த
முழுமணித் திரள்அமு(து) ஆங்கே
தாய்தலைப் பட்டங்(கு) உருகிஒன் றாய
தன்மையில் என்னைமுன் ஈன்ற
நீதலைப் பட்டால் யானும் அவ்வகையே
நிசிசரர் இருவரோடு ஒருவர்
காதலிற் பட்ட கருணையாய் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 7

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமலரு(கு) அளிக்கும்நின் பெருமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 8

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போல்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென்(று) அறிவினுக்(கு) அறியப்
புகுந்ததோர் யோகினில் பொலிந்து
நுண்ணியை எனினும் நம்பநின் பெருமை
நுன்னிடை ஒடுங்கநீ வந்தென்
கண்ணினுள் மணியிற் கலந்தனை கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 9

அங்கைகொண்(டு) அமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம்பு அலம்பவந்(து) ஒருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை மருங்கில்
கொங்கைகொண்(டு) அனுங்கும் கொடியிடை காணில்
கொடியள்என்(று) அவிர்சடை முடிமேல்
கங்கைகொண் டிருந்த கடவுளே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. 10

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோ(டு) அணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோ(டு) உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதும் சிவனருட் கடலே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. திருப்பூவணம்

பண்:பஞ்சமம் பதிகஎண்: 14

திருச்சிற்றம்பலம்

திருவருள் புரிந்தாள் ஆண்டுகொண் டிங்ஙன்
சிறியனுக்(கு) இனியது காட்டிப்
பெரிதருள் புரிந்தா னந்தமே தரும்நின்
பெருமையிற் பெரியதொன் றுளதே
மருதர சிருங்கோங்கு அகில்மரம் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்
பொருதிரை மருங்கோங்(கு) ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 1

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 2

கரைகடல் ஒலியில் தமருகத்(து) அரையில்
கையினிற் கட்டிய கயிற்றால்
இருதலை ஒருநா இயங்கவந்(து) ஒருநாள்
இருந்திடாய் எங்கள்கண் முகப்பே
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோது அவிழ்ந்த
புரிசடை துகுக்கும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 3

கண்ணியல் மணியின் குழல்புக்(கு) அங்கே
கலந்துபுக்(கு) ஒடுங்கினேற்(கு) அங்ஙன்
நுண்ணியை எனினும் நம்பநின் பெருமை
நுண்ணிமை இறந்தமை அறிவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்ணியன் மரபில் தங்கிருள் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றாடும்
புண்ணிய மகளிர் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 4

கடுவினைப் பாசக் கடல்கடந்து ஐவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியினை இரண்டும் அடையுமா(று) அடைந்தேன்
அருள் செய்வாய் அருள்செயா தொழிவாய்
நெடுநிலை மாடத்(து) இரவிருள் கிழிக்க
நிலைவிளக்(கு) அல்கில்சா லேகம்
புடைகிடந்(து) இலங்கும் ஆவண வீதிப்
பூவணங் கோயில் கொண் டாயே. 5

செம்மனக் கிழவோர் அன்புதா என்றுன்
சேவடி பார்த்திருந்(து) அலச
எம்மனம் குடிகொண் டிருப்பதற்(கு) யானார்
என்னுடை அடிமைதான் யாதே
அம்மனம் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
அரிவையர் அவிழ்குழல் சுரும்பு
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 6

சொன்னவில் முறைநான்(கு) ஆரணம் உணராச்
சூழல்புக்(கு) ஒளித்தநீ இன்று
கன்னவில் மனத்தென் கண்வலைப் படும்இக்
கருணையிற் பெரியதொன் றுளதே
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே. 7

8, 9 பாடல்கள் கிடைக்கவில்லை

பூவணங் கோயில் கொண்டெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனைவெண்
கோவணங் கொண்டு வெண்டலை ஏந்தும்
குழகனை அழகெலாம் நிறைந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தீவணன் தன்னைச் செழுமறை தெரியும்
திகழ்கரு வூரனேன் உரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும் வல் லார்கள்
பரமனது உருவமா குவரே. 10

திருச்சிற்றம்பலம்

15. திருச்சாட்டியக்குடி

பண்:பஞ்சமம் பதிகஎண்: 15

திருச்சிற்றம்பலம்

பெரியவா கருணை இளநிலா எறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப்பு அவிழ்ந்து
சரியுமா கழியங் குழைமிளிர்ந்து இருபால்
தாழ்ந்தவா காதுகள் கண்டம்
கரியவா தாமும் செய்யவாய் முறுவல்
காட்டுமா சாட்டியக் குடியார்
இருகைகூம் பினகண்(டு) அலர்ந்தவா முகம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 1

பாந்தள்பூ ணாரம் பரிகலம் கபாலம்
பட்டவர்த் தனம்எரு(து) அன்பர்
வார்ந்தகண் அருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெரும் தேவி
சாந்தமும் திருநீ(று) அருமறை கீதம்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயம் கோயில்மாளிகைஏழ்
இருக்கையுள் இருந்தஈ சனுக்கே. 2

தொழுதுபின் செல்வ(து) அயன்முதற் கூட்டம்
தொடர்வன மறைகள்நான் கெனினும்
கழுதுறு கரிகா(டு) உறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தூண்
தழலுமிழ் அரவம் கோவணம் பளிங்கு
செபவடம் சாட்டியக் குடியார்
இழுதுநெய் சொரிந்தோம்(பு) அழலொளி விளக்கேழ்
இருக்கையில் இருந்த ஈசனுக்கே. 3

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிகநான் மறைதும் புருவும்நா ரதரும்
பரிவொடு பாடுகாந் தர்ப்பர்
கதியெலாம் அரங்கம் பிணையல் மூவுலகில்
கடியிருள் திருநடம் புரியும்
சதியிலார் கதியில் ஒலிசெய்யும் கையில்
தமருகம் சாட்டியக் குடியார்
இதயமாம் கமலம் கமலவர்த் தனைஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 4

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை அரையர்தம் பாவை
தருமலி வளனாம் சிவபுரன் தோழன்
தனபதி சாட்டியக் குடியார்
இருமுகம் கழல்மூன்று ஏழுகைத் தலம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே. 5

அனலமே புனலே அனிலமே புவனி
அம்பரா அம்பரத்(து) அளிக்கும்
கனகமே வெள்ளிக் குன்றமே என்றன்
களைகணே, களைகண்மற் றில்லாத்
தனியனேன் உள்ளம் கோயில்கொண் டருளும்
சைவனே சாட்டியக் குடியார்க்(கு)
இனியதீங் கனியாய் ஒழிவற நிறைந்துஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயல்பே. 6

செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்து
அன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே
அத்தனே பித்தனே னுடைய
சம்புவே அணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்(கு)
இன்பனே எங்கும் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள்நான் மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி ஏழ் இருக்கை
இறைவனே போற்றியே போற்றி 8

சித்தனே அருளாய் செங்கணா அருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே அருளாய் அமரனே அருளாய்
அமரர்கள் அதிபனே அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே அருளாய் முதல்வனே அருளாய்
முன்னவா துயர்கெடுத்(து) எனக்கே. 9

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளாய் இருக்கும்ஏழ் இருக்கை
இருந்தவன் திருவடி மலர்மேல்
காட்டிய பொருட்கலை பயில்கரு ஊரன்
கழறுசொல் மாலைஈர் ஐந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக்(கு) அன்றே
வளரொளி விளங்குவா னுலகே. 10

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. தஞ்சை இராசராசேச்சரம்

பதிகஎண்: 16

பண்:பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் தொழவந்(து) எழுகதிர்ப் பருதி
ஒன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்(பு) அச்சோ
அங்ஙனே அழகிதோ, அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் திங்கள்
இலைகுலாம் பதணத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்(து) இவர்க்கே. 1

நெற்றியிற் கண்ணென் கண்ணில்நின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம்(பு) அலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன இல்லை
மற்றெனக்(கு) உறவென் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதிகில்வாழ் முதலை
எற்றிநீர்க் கிடங்கில் இஞ்சிசூழு தஞ்சை
இராசரா சேச்சரத் .திவர்க்கே. 2

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனோ கோங்கிணர் அனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்து
உக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்(கு)
இடைகெழு மாடத்து இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 3

வாழியம் போதத்(து) அருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசலர் ஆதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காழகில் கமழும் மாளிகை மகளீர்
கங்குல்வாய் அங்குலி கெழும
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 4

எவரும்மா மறைகள் எவையும் வானவர்கள்
ஈட்டமும் தாட்டிருக் கமலத்
தவரும்மா லவனும் அறிவரும் பெருமை
அடலழல் உமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற்(று) அரசின(து) ஈட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 5

அருளுமா(று) அருளி ஆளுமா(று) ஆள
அடிகள்தம் அழகிய விழியும்
குருளும்வார் காதும் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ(து) அழகோ
தரளவான் குன்றில் தண்நிலா ஒளியும்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாம் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 6

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிர்இறப்(பு) இலைஉதிர்(வு) என்றால்
நினைப்பருந் தம்பால்சேறலின் றேனும்
நெஞ்சிடிந்(து) உருகுவ(து) என்னே
கனைப்பெருங் கலங்கல் பொய்கையங் கழுநீர்ச்
சூழல்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழு தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 7

பன்நெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்நெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மின்நெடும் புருவத்(து) இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 8

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத்(து) ஒளிப்பார்
அங்கழல் சுடராம் அவர்க்கிள வேனல்
அலர்கதிர் அனையவா ழியரோ
பொங்கெழில் திருநீறு அழிபொசி வனப்பில்
புனல்துளும்(பு) அவிர்சடை மொழுப்பர்
எங்களுக்(கு) இனியர் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 9

தனியர்ஏத் தனைஓ ராயிர வருமாம்
தன்மையர் என்வயத் தினராம்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலர்புரி சடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்(கு)
இனியர்எத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. 10

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந்து அருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்தசொல் மாலைஈ ரைந்தின்
பொருள்மருந்(து) உடையோர் சிவபதம் என்னும்
பொன்நெடுங் குன்றுடை யோரே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. திருவிடைமருதூர்

பண்: பஞ்சமம்

பதிகஎண்: 17

திருச்சிற்றம்பலம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி உமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட்(டு) அவிர்சடைமொழுப்பின்
அழிவழ கியதிரு நீற்று
மைய செங் கண்டத்(து) அண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே. 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்(டு)
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாகம் மேகலை அரையா
அகந்தொறும் பலிதிரி அடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந்(து) ஒலிப்ப
மந்திர கீதம் தீங்குழல் எங்கும்
மருவிடம் திருவிடை மருதே. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென்(று) இங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல(கு) ஒழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமகள் உடனாய்த்
தூக்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை அணுகி நுணிகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடைமருதே. 3

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்கு
அடியனேன் உள்கலந்து அடியேன்
பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன்
படர்சடை விடம்மிடற்(று) அடிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துணியுமிழ் ஆடை அரையிலோர் ஆடை
கடர்உமிழ் தரஅதன் அருகே
மணியுமிழ் நாகம் அணியுமிழ்ந்(து) இமைப்ப
மருவிடம் திருவிடைமருதே. 4

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்று சென்றேறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுறா வண்ணம்
எந்தையும் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிகள் உடனாய்
வந்தணு காது நுணிகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடைமருதே. 5

எரிதரு கரிகாட்(டு) இடுபிணம் நிணமுண்(டு)
ஏப்பமிட்(டு) இலங்கெயிற்(று) அழல்வாய்த்
துருகழல் நெடும்பேய்க் கணம்எழுந்தாடும்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவல் முகில்நிலா எறிப்ப
அந்திபோன்(று) ஒளிர்திரு மேனி
வரியர(வு) ஆட ஆடும்எம் பெருமான்
மருவிடம் திருவிடைமருதே. 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந்(து) உருகி
அழலையாம் புருவம் புனலொடும் கிடந்தாங்கு
ஆதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்சம் இடர்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடம் திருவிடை மருதே. 7

வையவாம் பெற்றம் பெற்றம்ஏ(று) உடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாம் செந்தீப் பட்டஇட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின்(பு) என்கோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றாயிர கோடி
மையவாங் கண்டத்(து) அண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே. 8

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலம் கலந்(து) அடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே என்று நின்(று) உருகிப்
புலம்புவார் அலம்புகார் அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி அனையான்
மருவிடம் திருவிடைமருதே. 9

ஒருங்கிருங் கண்ணின் எண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கண்நின்(று) இமைக்கும் செழுஞ்சுடர் விளக்கம்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயாழ் உதிப்ப
வருங்கருங் கண்டத்து அண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடைமருதே. 10

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூந்துருத்தி நம்பி காடநம்பி அருளியது

18. திருவாரூர்

பண்:பஞ்சமம் பதிகஎண்: 18

திருச்சிற்றம்பலம்

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கண்நா யகராய்ப் பவனிபோந்(து) இங்ஙன்
முரிவதோர் முரிவுமை அளவும்
தக்கசீர்க் கங்கை அளவுமன்(று) என்னோ
தம்மொருப் பாடுல கதன்மேல்
மிக்கசீர் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே. 1

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ(று) அமுதம்ஒத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே. 2

திருச்சிற்றம்பலம்

19. கோயில்

பண்: சாளரபாணி பதிக எண்: 19

திருச்சிற்றம்பலம்

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே. 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக் கூத் தாடினையே. 2

அல்லியம் பூம்பழனத்(து) ஆமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே தென்தில்லைக்
கொல்லை விடையேறி கூத்தா(டு) அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே. 3

எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்(டு) எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே. 4

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே. 5

அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோகம் உண்டென்று புகுமிடம்நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணியசீர்ச்
சிவலோகம் ஆவதுவும் தில்லைச் சிற் றம்பலமே. 6

களகமணி மாடம் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளகமதி நுதலார் ஆயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை ஆங்ககற்றும்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே. 7

பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமலர் நாடோறும்
ஆடகத்தால் மேய்ந்தமைந்த அம்பலம்நின் ஆடரங்கே.8

உருவத்(து) எரியுருவாய் ஊழிதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனும் மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி ஏய்ந்திலங்கு மாளிகைசூழ்ந்(து)
அரவிக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே. 9

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேடர் உறைதில்லைச் சிற்றம் பலத்தான்தன்
ஆடல் அதியசத்தை ஆங்கறித்து பூந்துருத்திக்
காடன் தமிழ் மாலை பத்தும் கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே. 10

திருச்சிற்றம்பலம்

கண்டராதித்தர் அருளியது

20. கோயில்

பண்: பஞ்சமம்

பதிகஎண்: 20

திருச்சிற்றம்பலம்

மின்னார் உருவம் மேல்விளங்க
வெண்கொடி மாளிகைசூழப்
பொன்னார் குன்றம் ஒன்றுவந்து
நின்றது போலும் என்னாத்
தென்னா என்று வண்டுபாடும்
தென்றில்லை யம்பலத்துள்
என்னா ரமுதை எங்கள் கோவை
என்றுகொல் எய்துவதே. 1

ஓவாமுத்தி அஞ்சு வேள்வி
ஆறங்க நான்மறையோர்
ஆவே படுப்பார் அந்த ணாளர்
ஆகுதி வேட்டுயர்வார்
மூவா யிரவர் தங்க ளோடு
முன்னரங் கேறிநின்ற
கோவே உன்றன் கூத்துக் காணக்
கூடுவ தென்றுகொலோ. 2

முத்தி யாளர் நான்ம றையர்
மூவா யிரவர்நின்னோ
டொத்தே வாழுந் தன்மை யாளர்
ஓதிய நான்மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடுந்
தென்றில்லை யம்பலத்துள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தாவுன்றன் ஆடல் காண
அணைவதும் என்றுகொலோ 3

மானைப் புரையும் மடமென் னோக்கி
மாமலை யாளோடும்
ஆனஞ் சாடுஞ் சென்னி மேல்ஓர்
அம்புலி சூடும் அரன்
றேனைப் பாலைத் தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துக்
கோனை ஞானக் கொழுந்து தன்னைக்
கூடுவ தென்றுகொலோ. 4

களிவான் உலகிற் கங்கை நங்கை
காதலனே அருளென்
றொளிமால் முன்னே வரங்கி டக்க
உன்னடி யார்க்கருளும்
தெளிவா ரமுதே தில்லை மல்கு
செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான் சுடரே உன்னை நாயேன்
உறுவதும் என்றுகொலோ. 5

பாரோர் முழுதும் வந்தி றைஞ்சப்
பதஞ்சலிக் காட்டுகந்தான்
வாரார் முலையாள் மங்கை பங்கன்
மாமறை யோர்வணங்கச்
சீரால் மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத் தாடுகின்ற
காரார் மிடற்றெம் கண்ட னாரைக்
காண்பதும் என்றுகொலோ. 6

இலையார் கதிர்வேல் இலங்கை வேந்தன்
இருபது தோளும் இற
மலைதான் எடுத்த மற்றவற்கு
வாளொடு நாள்கொடுத்தான்
சிலையால் புரமூன் றெய்த வில்லி
செம்பொனின் அம்பலத்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலையார் மறிபொற் கையி னானைக்
காண்பதும் என்றுகொலோ. 7

வெங்கோல் வேந்தன் தென்னன் நாடும்
ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழி வேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடி ஆடும்
அணிதில்லை யம்பலத்துள்
எங்கோன் ஈசன் எம்மி றையை
என்றுகொல் எய்துவதே. 8

நெடியா னோடு நான்மு கன்னும்
வானவரும் நெருங்கி
முடியால் முடிகள் மோதி உக்க
முழுமணி யின்திரளை
அடியார் அலகி னால் திரட்டும்
அணிதில்லை யம்பலத்துக்
கடியார் கொன்றை மாலை யானைக்
காண்பதும் என்றுகொலோ. 9

சீரால்மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத் தாடிதன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன்
தஞ்சையர் கோன்கலந்த
ஆராஇன்சொற் கண்டரா தித்தன்
அருந்தமிழ் மாலைவல்லார்
பேரா உலகில் பெருமையோடும்
பேரின்பம் எய்துவரே. 10

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேணாட்டடிகள் அருளியது

21. கோயில்

பண்: புறநீர்மை

பதிகஎண்: 21

திருச்சிற்றம்பலம்

துச்சான செய்திடினும் பொறுப்பரன்றே ஆளுகப்பார்
கைச்சாலும் சிறுகதலி இலைவேம்பும் கறிகொள்வார்
எச்சார்வும் இல்லாமை நீயறிந்தும் எனதுபணி
நச்சாய்காண் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே 1

தம்பானை சாய்ப்பற்றார் என்னும் முதுசொல்லும்
எம்போல்வார்க்(கு)இல்லாமை என்னளவே அறிந்தொழிந்தேன்
வம்பானார் பணிஉகத்தி வழிஅடியேன் தொழிலிறையும்
நம்பாய்காண் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே 2

பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம்என் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமான் ஓஎனினும்
இசையானால் என்திறத்தும் எனையுடையாள் உரையாடாள்
நசையானேன் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 3

ஆயாத சமயங்கள் அவரவர்கள் முன்பென்னை
நோயோடு பிணிநலிய இருக்கின்ற அதனாலே
பேயாவித் தொழும்பனைத்தும் பிரான்இகழும் என்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 4

நின்றுநினைந்(து) இருந்துகிடந்து எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையா(து) இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 5

படுமதமு மிடவயிறும் உடையகளி றுடையபிரான்
அடியறிய உணர்த்துவதும் அகத்தியனுக்(கு) ஒத்தன்றே
இடுவதுபுல் ஓர்எருதுக்(கு) ஒன்றினுக்கு வையிடுதல்
நடுஇதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 6

மண்ணோடு விண்ணளவும் மனிதரொடு வானவர்க்கும்
கண்ணாவாய் கண்ணாகா(து) ஒழிதலும்நான் மிகக்கலங்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ணாவோ என்றண்ணாந்(து) அலமந்து விளித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 7

வாடாவாய் நாப்பிதற்றி உனைநினைந்து நெஞ்சுருகி
வீடாஞ்செய் குற்றேவல் எற்றேமற் றிதுபொய்யில்
கூடாமே கைவந்து குறுகுமா(று) யான்உன்னை
நாடாயால் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 8

வாளாமால் அயன்வீழ்ந்து காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத் துணையாரத் தொழுதாலும்
ஆளோநீ உடையதுவும் அடியேன்உன் தாள்சேரும்
நாளேதோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 9

பாவார்ந்த தமிழ்மாலை பத்தரடித் தொண்டனெடுத்(து)
ஓவாதே அழைக்கின்றான் என்றருளின் நன்றுமிகத்
தேவேதென் திருத்தில்லைக் கூத்தாடி நாயடியேன்
சாவாயும் நினைக்கொண்டல் இனியுனக்கு தடுப்பரிதே.10

திருச்சிற்றம்பலம்

திருவாலியமுதனார் அருளியது

22. கோயில்

பயண்: பஞ்சமம் பதிகஎண்: 22

திருச்சிற்றம்பலம்

மையல் மாதொரு கூறன் மால்விடை
யேறி மான்மறி யேந்தி யதடங்
கையன் கார்புரை யுங்கறைக்
கண்டன் கனன் மழுவான்
ஐயன் ஆரழல் ஆடு வான் அணி
நீர்வயல் தில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென் சிந்தை
யுள்ளிடங் கொண் டனவே. 1

சலம் பொற் றாமரை தாழ்ந்தெ ழுந்ததட
முந்தடம்புனல் வாய்மலர் தழீஇ
அலம்பி வண்டறையும் அணி
யார்தில்லை யம்பலவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புலம்பி வானவர் தான வர்புகழ்ந்
தேத்த ஆடுபொற் கூத்தனார்கழற்
சிலம்பு கிங்கிணிஎன் சிந்தை
யுள்ளிடங் கொண்டனவே. 2

குருண்ட வார்குழற் கோதை மார்குயில்
போல்மி ழற்றிய கோல மாளிகை
திரண்ட தில்லைதன்னுள் திரு
மல்குசிற் றம்பலவன்
மருண்டு மாமலை யான்மகள்தொழ
ஆடுங் கூத்தன் மணிபு ரைதரு
திரண்ட வான்குறங்கென் சிந்தை
யுள்ளிடங் கொண்டனவே. 3

போழ்ந்தி யானை தன்னைப் பொருப்பன்
மகள் உமை யச்சங் கண்டவன்
தாழ்ந்த தண்புனல்சூழ் தட
மல்குசிற் றம்பலவன்
சூழ்ந்த பாய்புலித் தோல்மிசைத் தொடுத்து
வீக்கும் பொன்னூல் தன்னினாடு
தாழ்ந்த கச்சதன்றே தமி
யேனைத் தளர்வித்ததே. 4

பந்த பாச மெலாம்அ றப்பசு
பாச நீக்கிய பன்மு னிவரோ
டந்தணர் வணங்கும் அணி
யார்தில்லை யம்பலவன்
செந்த ழல்புரை மேனியுந் திகழுந்
திருவயிறும் வயிற்றினுள்
உந்தி வான்சுழிஎன் உள்ளத்
துள்ளிடங் கொண்டனவே. 5

குதிரை மாவொடு தேர்ப லகுவிந்
தீண்டுதில்லையுட் கொம்ப னாரொடு
மதுர வாய்மொழி யார்மகிழ்ந்
தேத்துசிற் றம்பலவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிர வார்கழல் வீசி நின்றழ
காநடம் பயில் கூத்தன் மேல்திகழ்
உதர பந்தனம் என் னுள்ளத்
துள்ளிடங் கொண்டனவே. 6

படங்கொள் பாம்பணை யானொ டுபிர
மன்ப ரம்பர மாவரு ளென்று
தடங்கை யால்தொழ வுந்தழல்
ஆடுசிற் றம்பலவன்
தடங்கை நான்கும் அத் தோள்க ளுந்தட
மார்பினிற் பூண்கள் மேற்றிசை
விடங்கொள் கண்டமன்றே வினை
யேனை மெலிவித்தவே. 7

செய்ய கோடுடன் கமல மலர்சூழ்தரு
தில்லை மாமறை யோர்கள் தாந்தொழ
வையம் உய்ய நின்று மகிழ்ந்
தாடுசிற் றம்பலவன்
செய்ய வாயின் முறுவலும் திகழுந்திருக்
காதும் காதினின் மாத்தி ரைகளோ
டைய தோடுமன்றே அடி
யேனை ஆட் கொண்டனவே. 8

செற்று வன்புரந் தீயெழச்சிலை
கோலி ஆரழல் ஊட்டினான் அவன்
எற்றி மாமணிகள் எறி
நீர்த்தில்லை யம்பலவன்
மற்றை நாட்ட மிரண்டொ டுமல
ருந்திரு முகமும் முகத்தினுள்
நெற்றி நாட்டமன்றே நெஞ்சு
ளேதிளைக் கின்றனவே. 9

தொறுக்கள் வான்கம லம்ம லருழக்
கக்க ரும்புநற் சாறு பாய்தர
மறுக்க மாய்க்கயல்கள் மடை
பாய்தில்லை யம்பலவன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முறுக்கு வார்சிகை தன்னொடு முகிழ்த்த
அவ்வ கத்துமொட் டோடு மத்தமும்
பிறைக்கொள் சென்னியன்றே பிரியா
தென்னுள் நின்றனவே. 10

தூவி நீரொடு பூவ வைதொழு
தேத்து கையின ராகி மிக்கதோர்
ஆவி யுள்நிறுத்தி யமர்ந்
தூறிய அன்பினராய்த்
தேவர்தாந் தொழ ஆடிய தில்லைக்
கூத்த னைத்திரு வாலி சொல்லிவை
மேவ வல்லவர்கள் விடை
யான் அடி மேவுவரே. 11

திருச்சிற்றம்பலம்

23. கோயில்

பண்: நட்டராகம் பதிகஎண்: 23

திருச்சிற்றம்பலம்

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழற்றிருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
டிருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழு கொக்கின்றதே. 1

ஒக்க ஓட்டந்த அந்தியும் மதியமும்
அலைகடல் ஒலியோடு
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப் பாய்தலும்
நிறையழிந் திருப்பேனைச்
செக்கர் மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் வகையாலே
பக்கம் ஓட்டந்த மன்மதன் மலர்க்கணை
படுந்தொறும் அலந்தேனே. 2

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அலந்து போயினேன் அம்பலக் கூத்தனே
    அணிதில்லை நகராளீ
சிலந்தி யைஅர சாள்கஎன் றருள்சைய்த
    தேவதே வீசனே
உலர்ந்த மார்க்கண்டிக் காகிஅக் காலனை
    உயிர்செக உதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை மேல் ஒற்ற
    வந்தருள் செய்யாயே. 3

அருள்செய் தாடுநல் லம்பலக் கூத்தனே அணிதில்லை
    நகராளீ
மருள்செய் தென்றனை வனமுலை பொன்பயப்
    பிப்பது வழக்காமோ
திரளும் நீண்மணிக் கங்கையைத் திருச்சடை
    சேர்த்திஅச் செய்யாளுக்
குருவம் பாகமும் ஈந்துநல் அந்தியை
    ஒண்ணுதல் வைத்தோனே. 4

வைத்த பாதங்கள் மாலவன் காண்கிலன்
    மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந் தின்னமுந் துதிக்கின்றார்
    எழில்மறை யவற்றாலே
செய்த்த லைக்கம லம்மலர்ந் தோங்கிய
    தில்லையம் பலத்தானைப்
பத்தியாற் சென்று கண்டிட என்மனம்
    பதைபதைப் பொழியாதே. 5

தேய்ந்து மெய்வெளுத் தகம்வளைந் தரவினை
    அஞ்சித்தான் இருந்தேயும்
காய்ந்து வந்துவந் தென்றனை வலிசெய்து
    கதிர்நிலா எரிதூவும்
ஆய்ந்த நான்மறை அந்தணர் தில்லையுள்
    அம்பலத் தரன் ஆடல்
வாய்ந்த மாமலர்ப் பாதங்கள் காண்பதோர்
    மனத்தினை யுடையேற்கே. 6

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உடையும் பாய்புலித் தோலும்நல் லரவமும்
உண்பதும் பலிதேர்ந்து
விடைய தூர்வதும் மேவிடங் கொடுவரை
ஆகிலும் என்னெஞ்சம்
மடைகொள் வாளைகள் குதிகொளும் வயற்றில்லை
யம்பலத் தனலாடும்
உடைய கோவினை யன்றிமற் றாரையும்
உள்ளுவ தறியேனே. 7

அறிவும் மிக்கநன் னாணமும் நிறைமையும்
ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு தந்தையும்
உடன்பிறந் தவரோடும்
பிரிய விட்டுனை யடைந்தனன் ஏன்றுகொள்
பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்குங்கொண் டந்தணர் ஏத்தநன்
மாநட மகிழ்வானே. 8

வான நாடுடை மைந்தனே யென்பன்
வந்தருளாய் என்பன்
பானெய் ஐந்துடன் ஆடிய படர்சடைப்
பால்வண்ண னேஎன்பன்
தேன மர்பொழில் சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூண் அணி மார்பனே
எனக்கருள் புரியாயே. 9

புரியும் பொன்மதில் சூழ்தரு தில்லையுள்
பூசுரர் பலர்போற்ற
எரிய தாடும் எம் ஈசனைக் காதலித்
தினைபவள் மொழியாக
வரைசெய் மாமதில் மயிலையர் மன்னவன்
மறைவல திருவாலி
பரவல் பத்திவை வல்லவர் பரமன
தடியிணை பணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24. கோயில்

பண்: இந்தளம் பதிக எண்: 24

திருச்சிற்றம்பலம்

அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய்
ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை மலையாய்
காண அருள் என்று
பல்லா யிரம்பேர் பதஞ்ச லிகள்
பரவ வெளிப்பட்டுச்
செல்வாய் மதிலின் றில்லைக் கருளித்
தேவன் ஆடுமே. 1

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலந்தன்னுட்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே. 2

இளமென் முலையார் எழில்மைந் தரொடும்
ஏரார் அமளிமேல்
திளையும் மாடத் திருவார் தில்லைச்
சிற்றம் பலந்தன்னுள்
வளர்பொன் மலையுள் வயிர மலைபோல்
வலக்கை கவித்துநின்
றளவில் பெருமை அமரர் போற்ற
அழகன் ஆடுமே. 3

சந்தும் அகிலும் தழைப்பீ லிகளும்
சாதி பலவுங்கொண்
டுந்தி யிழியும் நிவவின் கரைமேல்
உயர்ந்த மதில்தில்லைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிந்திப் பரிய தெய்வப் பதியுள்
சிற்றம் பலந்தன்னுள்
நந்தி முழவம் கொட்ட நட்டம்
நாதன் ஆடுமே. 4

ஓமப் புகையும் அகிலின் புகையும்
உயர்ந்து முகில்தோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர் மல்கு
சிற்றம் பலந்தன்னுள்
வாமத் தெழிலார் எடுத்த பாதம்
மழலைச் சிலம்பார்க்கத்
தீமெய்ச் சடைமேல் திங்கள் சூடித்
தேவன் ஆடுமே. 5

குரவம் கோங்கம் குளிர்புன்னை கைதை
குவிந்த கரைகள் மேல்
திரைவந் துலவும் தில்லை மல்கு
சிற்றம் பலந்தன்னுள்
வரைபோல் மலிந்த மணிமண் டபத்து
மறையோர் மகிழ்ந்தேத்த
அரவம் ஆட அனல்கை யேந்தி
அழகன் ஆடுமே. 6

சித்தர் தேவர் இயக்கர் முனிவர்
தேனார் பொழில்தில்லை
அத்தா அருளாய் அணிஅம் பலவா
என்றென்றவர் ஏத்த
முத்தும் மணியும் நிரந்த தலத்துள்
முளைவெண் மதிசூடிக்
கொத்தார் சடைகள் தாழநட்டம்
குழகன் ஆடுமே. 7

அதிர்ந்த அரக்கன் நெரிய விரலால்
அடர்த்தாய் அருளென்று
துதித்து மறையோர் வணங்குந் தில்லைச்
சிற்றம் பலந்தன்னுள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உதித்த போழ்தில் இரவிக் கதிர்போல்
    ஒளிர்மா மணியெங்கும்
பதித்த தலத்துப் பவள மேனிப்
    பரமன் ஆடுமே. 8

மாலோ டயனும் அமரர் பதியும்
    வந்து வணங்கிநின்
றால கண்டா அரனே யருளாய்
    என்றென் றவரேத்தச்
சேலா டும்வயல் தில்லை மல்கு
    சிற்றம் பலந்தன்னுள்
பாலா டும்முடிச் சடைகள் தாழப்
    பரமன் ஆடுமே. 9

நெடிய சமணும் மறைசாக் கியரும்
    நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோர் அடையாத் தில்லைச்
    சிற்றம் பலந்தன்னுள்
அடிக ளவரை ஆரூர் நம்பி
    யவர்கள் இசை பாடக்
கொடியும் விடையும் உடையகோலக்
    குழகன் ஆடுமே. 10

வானோர் பணிய மண்ணோர் ஏத்த
    மன்னி நடமாடும்
தேனார் பொழில்சூழ் தில்லை மல்கு
    சிற்றம் பலத்தானைத்
தூநான் மறையான் அமுத வாலி
    சொன்ன தமிழ்மாலைப்
பானேர் பாடல் பத்தும் பாடப்
    பாவம் நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. கோயில்

பண்: பஞ்சமம்

பதிகஎண்: 25

திருச்சிற்றம்பலம்

கோல மலர்நெடுங்கட் கொவ்வை
வாய்க்கொடி யேரிடையீர்
பாலினை யின்னமுதைப் பர
மாய பரஞ்சுடரைச்
சேலுக ளும்வயல்சூழ் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
தேலுடை எம்மிறையை
என்றுகொல் காண்பதுவே. 1

காண்பதி யானென்றுகொல் கதிர்
மாமணி யைக்கனலை
ஆண்பெண் அருவுருவென் றறி
தற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலம்
மாண்புடை மாநடஞ்செய் மறை
யோன்மலர்ப் பாதங்களே. 2

கள்ளவிழ் தாமரைமேற் கண்
டயனோடு மால்பணிய
ஒள்ளரி யின்னடுவே உரு
வாய்ப்பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில்சூழ் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற ஒரு
வனையு ணர்வரிதே. 3

அரிவையோர் கூறுகந்தான் அழ
கன் எழில் மால்கரியின்
உரிவைநல் லுத்தரியம் உகந்
தான் உம்ப ரார்தம்பிரான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புரிபவர்க் கின்னருள்செய் புலி
யூர்த்திருச் சிற்றம்பலத்
தெரிமகிழ்ந் தாடுகின்றஎம்
பிரான் என் இறையவனே. 4

இறைவனை என்கதியை என்னு
ளேயுயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும்விண்ணும் மலி
வான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலம்
நிறையணி யாம் இறையை நினைத்
தேன் இனிப் போக்குவனே. 5

நினைத்தேன் இனிப்போக்குவனோ நிம
லத்திரளை நினைப்பார்
மனத்தினு ளேயிருந்த மணி
யைமணி மாணிக்கத்தைக்
கனைத்திழி யுங்கழனிக் கன
கங்கதிர் ஒண்பவளம்
சினத்தொடு வந்தெறியுந் தில்லை
மாநகர்க் கூத்தனையே. 6

கூத்தனை வானவர்தங் கொழுந்
தைக்கொழுந் தாய் எழுந்த
மூத்தனை மூவுருவின் முத
லைமுத லாகிநின்ற
ஆத்தனைத் தான்படுக்கும் அந்
தணர்தில்லை யம்பலத்துள்
ஏத்தநின் றாடுகின்ற எம்
பிரான் அடி சேர்வன்கொலோ. 7

சேர்வன் கொ லோஅன்னைமீர் திக
ழும்மலர்ப் பாதங்களை
ஆர்வங் கொளத்தழுவி அணி
நீறுஎன் முலைக்கணியச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீர்வங்கம் வந்தணவுந் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
தேர்வங்கை மான்மறியன் எம்
பிரான்போல் நேசனையே. 8

நேசமு டையவர்கள் நெஞ்சு
ளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர் கண்
ணுதலைக் காமருசீர்த்
தேச மிகுபுகழோர் தில்லை
மாநகர்ச் சிற்றம்பலத்
தீசனை எவ்வுயிர்க்கும் எம்
இறைவன் என்றேத்துவனே. 9

இறைவனை ஏத்துகின்ற இளை
யாள்மொழி யின்தமிழால்
மறைவல நாவலர்கள் மகிழ்ந்
தேத்துசிற் றம்பலத்தை
அறைசெந்நெல் வான்கரும்பின் அணி
ஆலைகள் சூழ்மயிலை
மறைவல வாலிசொல்லை மகிழ்ந்
தேத்துக வான் எளிதே. 10

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புருடோத்தமநம்பி அருளியது

26. கோயில்

பண்: பஞ்சமம் பதிகஎண்: 26

திருச்சிற்றம்பலம்

வாரணி நறுமலர் வண்டு கிண்டு
பஞ்சமம் செண்பக மாலைமாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்து வந்திலைநம்மை மயக்குமாலோ
சீரணி மணிதிகழ் மாடம் ஓங்கு
தில்லையம்பலத்(து) எங்கள் செல்வன் வாரான்
ஆரெனை அருள்புரிந்(து) அஞ்சல் என்பார்
ஆவியின் பரம்என்றன் ஆதரவே. 1

ஆவியின் பரம்என்றன் ஆதரவும்
அருவினை யேனைவிட்டு அம்மஅம்ம
பாவிவன் மனமிது பையவே போய்ப்
பனிமதிச் சடையான் பாலதாலோ
நீவியும் நெகிழ்ச்சியும் நிறையழிவும்
நெஞ்சமும் தஞ்சமி லாமையாலே
ஆவியின் வருத்தம் இதாரறிவார்
அம்பலத்(து) அருள்நடம் ஆடுவானே. 2

அம்பலத் தருள்நடம் ஆடவேயும்
யாதுகொல் விளைவதென்(று) அஞ்சிநெஞ்சம்
உம்பர்கள்வன்பழி யாளர்முன்னே
ஊட்டினர் நஞ்சைஎன் றேயும் உய்யேன்
வன்பல படையுடைய பூதஞ்சூழ
வானவர் கணங்களை மாற்றியாங்கே
என்பெரும் பயலைமை தீரும்வண்ணம்
எழுந்தரு ளாய்எங்கள் வீதியூடே 3

எழுந்தருளாய் எங்கள் வீதியூடே
ஏதமில் முனிவரோ(டு) எழுந்தஞானக்
கொழுந்தது வாகிய கூத்தனேநின்
குழையணி காதினில் மாத்திரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செழுந்தட மலர்புரை கண்கள் மூன்றும்
செங்கனி வாயும்என் சிந்தைவௌவ
அழுந்தும்என் ஆருயிர்க்(கு) என்செய் கேனோ
அரும்புனல் அலமரும் சடையினானே 4

அரும்புனல் அலமரும் சடையி னானை
அமரர்கள் அடிபணிந்து அரற்ற அந்நாள்
பெரும்புரம் எரிசெய்த சிலையின் வார்த்தை
பேசவும் நையும் என் பேதை நெஞ்சில்
கருந்தட மலர்புரை கண்ட வண்டார்
காரிகை யார்முன்(பு)என் பெண்மை தோற்றேன்
திருந்திய மலரடி நசையி னாலே
தில்லையம் பலத்தெங்கள் தேவ தேவே. 5

தில்லையம் பலத்தெங்கள் தேவ தேவைத்
தேறிய அந்தணர் சிந்தை செய்யும்
எல்லைய தாகிய எழில்கொள் சோதி
என்னுயிர் காவல்கொண் டிருந்த எந்தாய்
பல்லையார் பகந்தலை யோ(டு) இடறிப்
பாதமென் மலரடி நோவ நீபோய்
அல்லினில் அருநடம் ஆடில் எங்கள்
ஆருயிர் காவலிங்(கு) அரிது தானே. 6

ஆருயிர் காவலிங்(கு) அருமை யாலே
அந்தணர் மதலைநின் அடிபணியக்
கூர்நுனை வேற்படைக்கூற்றம் சாயக்
குரைகழல் பணிகொள மலைந்த தென்றால்
ஆரினி அமரர்கள் குறைவி லாதார்
அவரவர் படுதுயர் களைய நின்ற
சீருயி ரேஎங்கள் தில்லை வாணா
சேயிழை யார்க்கினி வாழ்வரிதே. 7

சேயிழை யார்க்கினி வாழ்வரிது
சிற்றம் பலத்தெங்கள் செல்வ னேநீ
தாயினும் மிகநல்லை என்றடைந்தேன்
தனிமையை நினைகிலை சங்க ராவுன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாயிரம் புலியதள் இன்னுடையும்
பையமேல் எடுத்தபொற் பாத மும்கண்(டு)
ஏயிவள் இழந்தது சங்கம் ஆவா
எங்களை ஆளுடை ஈச னேயோ. 8

எங்களை ஆளுடை ஈசனையோ
இளமுலை முகம்நெக முயங்கி நின்பொற்
பங்கயம் புரைமுகம் நோக்கி நோக்கிப்
பனிமதி நிலவதென் மேற்படரச்
செங்கயல் புரைகண்ணி மார்கள் முன்னே
திருச்சிற்றம் பலமுட னேபுகுந்து
அங்குன பணிபல செய்து நாளும்
அருள்பெறின் அகலிடத் திருக்கலாமே. 9

அருள்பெறின் அகலிடத்(து) இருக்கலா மென்று
அமரர்கள் தலைவனும் அயனும் மாலும்
இருவரும் அறிவுடையாரின் மிக்கார்
ஏத்துகின் றார் இன்னம் எங்கள்கூத்தை
மருள்படு மழலைமென் மொழிவுமையாள்
கணவனை வல்வினை யாட்டி யேனான்
அருள்பெற அலமரும் நெஞ்சம் ஆவா
ஆசையை அளவறுத் தார்இங் காரே 10

ஆசையை அளவறுத் தார்இங் காரே
அம்பலத்(து) அருநடம் ஆடு வானை
வாசநன் மலரணி குழல்மடவார்
வைகலும் கலந்தெழு மாலைப் பூசல்
மாசிலா மறைபல ஓது நாவன்
வன்புரு டோத்தமன் கண்டு ரைத்த
வாசக மலர்கள் கொண் டேத்த வல்லார்
மலைமகள் கணவனை அணைவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27. கோயில்

பண்:பஞ்சமம் பதிகஎண்: 27

திருச்சிற்றம்பலம்

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை உண்டார்தாம்
ஊனமிலா என்கை ஒளிவளைகள் கொள்வாரோ
தேனல்வரி வண்டறையும் தில்லைசிற்றம்பலவர்
நானமரோ என்னாதே நாடகமே ஆடுவரே.

ஆடிவரும் கார்அரவும் ஐம்மதியம் பைங்கொன்றை
சூடிவருமா கண்டேன் தோள்வளைகள் தோற்றாலும்
தேடியிமை யோர்பரவும் தில்லைசிற்றம் பலவர்
ஆடிவரும் போதருகே நிற்கவுமே ஒட்டாரே. 2

ஒட்டா வகைஅவுணர் முப்புரங்கள் ஓர்அம்பால்
பட்டாங்(கு) அழல்விழுங்க எய்துகந்த பண்பினார்
சிட்டார் மறையோவாத் தில்லைசிற்றம் பலவர்
கொட்டா நடமாடக் கோல்வளைகள் கொள்வாரே. 3

ஆரே இவைபடுவார் ஐயங் கொளவந்து
போரேடி என்று புருவம் இடுகின்றார்
தேரார் விழவோவாத் தில்லைசிற் றம்பலவர்
தீராநோய் செய்வாரை ஒக்கின்றார் காணீரே. 4

காணீரே என்னுடைய கைவளைகள் கொண்டார்தாம்
சேணார் மணிமாடத் தில்லைசிற் றம்பலவர்
பூணார் வனமுலைமெல் பூஅம்பால் காமவேள்
ஆணாடு கின்றவா கண்டும் அருளாரே. 5

ஏயிவரே வானவர்க்கும் வானவரே என்பாரால்
தாயிவரே எல்லார்க்கும் தந்தையுமாம் என்பாரால்
தேய்மதியம் சூடிய தில்லைச் சிற்றம் பலவர்
வாயினைக் கேட்டறிவார் வையகத்தார் ஆவாரே. 6

ஆவா இவர்தம் திருவடிகொண்டு அந்தகன்தன்
மூவா உடலழியக் கொன்றுகந்த முக்கண்ணர்
தேவா மறைபயிலும் தில்லைச்சிற்றம் பலவர்
கோவா இனவளைகள் கொள்வாரோ என்னையே. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னை வலிவாரார் என்ற இலங்கையர் கோன்
மன்னும் முடிகள் நெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித் தில்லைச் சிற்றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவார் ஒவ்வார் இம் முத்தரே. 8

முத்தர் முதுபகலே வந்தென்றன் இல்புகுந்து
பத்தர் பலியிடுக என்றெங்கும் பார்க்கின்றார்
சித்தர் கணம்பயிலும் தில்லைச்சிற்றம் பலவர்
கைத்தலங்கள் வீசிநின் றாடுங்கால் நோக்காரே. 9

நோக்காத தன்மையால் நோக்கிலோம் யாமென்று
மாற்காழி ஈந்து மலரோனை நிந்தித்துச்
சேக்காத லித்தேறும் தில்லைச்சிற்றம்பலவர்
ஊர்க்கேவந்(து) என்வளைகள் கொள்வாரோ ஒண்ணுதலீர் 10

ஒண்ணுதலி காரணமா உம்பர் தொழுதேத்தும்
கண்ணுதலான் தன்னைப் புருடோத்தமன் சொன்ன
பண்ணுதலைப் பத்தும் பயின்றாடிப் பாடினார்
எண்ணுதலைப் பட்டங் கினிதா இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

சேதிராயர் அருளியது

28. கோயில்

பண்: பஞ்சமம் பதிகஎண்: 28

திருச்சிற்றம்பலம்

சேலு லாம்வயல் தில்லையு ளீர்உமைச்
சால நாள்அயன் சார்வதி னால்இவள்
வேலை யார்விடம் உண்டுகந் தீர்என்று
மால தாகும்என் வாணுதலே. 1

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாணம் அற்றனள் நான்அறி யேன்இனிச்
சேணு தற்பொலி தில்லையு ளீர்உமை
காணில் எய்ப்பிலள் காரிகையே. 2

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

காரி கைக்(கு)அரு ளீர்கரு மால்கரி
ஈரு ரித்தெழு போர்வையி னீர்மிகு
சீரி யல்தில்லை யாய்சிவ னே என்று
வேரி நற்குழலாள் இவள்விம்முமே. 3

விம்மி விம்மியே வெய்துயிர்த்(து) ஆளெனா
உம்மை யேநினைந்(து) ஏத்துமொன்(று) ஆகிலள்
செம்ம லோர்பயில் தில்லையு ளீர்எங்கள்
அம்மல் ஓதி அயர்வுறுமே. 4

அயர்வுற்(று) அஞ்சலி கூப்பி அந்தோஎனை
உயவுன் கொன்றையுந் தார்அருளாய்எனும்
செயலுற் றூர்மதில் தில்லையு ளீர்இவண்
மயலுற் றாள்என்றன் மாதிவளே. 5

மாதொர் கூறன்வண் டார்கொன்றை மார்பன்என்(று)
ஓதில் உய்வன்ஒண் பைங்கிளி யேஎனும்
சேதித் தீர்சிரம் நான்முக னைத்தில்லை
வாதித் தீர்என்மடக் கொடியையே. 6

கொடியைக் கோமளச் சாதியைக் கொம்பிளம்
பிடியை என்செய்திட் டீர்பகைத் தார்புரம்
இடியச் செஞ்சிலை கால்வளைத் தீர்என்று
முடியும் நீர்செய்த மூச்சறவே. 7

அறவ னேஅன்று பன்றிப் பின்ஏகிய
மறவ னேஎனை வாதைசெய் யேல்எனும்
சிறைவண் டார்பொழில் தில்லையு ளீர்எனும்
பிறைகு லாம்நுதற் பெய்வளையே. 8

அன்ற ருக்கனைப் பல்லிறுத்(து) ஆனையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீர்எனும்
தென்ற லார்பொழில் தில்லையு ளீர்இவள்
ஒன்றும் ஆகிலள் உம்பொருட்டே. 9

ஏயு மா(று)எழில் சேதிபர் கோன்தில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய இன்பம்எய் தியிருப்பரே. 10

திருவிசைப்பா முழுதும் நிறைவுபெற்றது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

29. கோயில்

பண்: பஞ்சமம் பதிகஎண்: 29

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள் உமை கோன் அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள் அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே. 2

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களு மேசிந்தித்
தட்டமூர்த் திக்கென் அகம் நெக ஊறும்
அமிர்தினுக் காலநீழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 3

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

புரந்தரன் மால் அயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் உயிர் ஆண்ட கோவினுக்
கென்செய வல்லம் என்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 5

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைஎன் ஆர்வத் தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 6

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. 7

சேலும் கயலும் திளைக்குங்கண் ணார் இளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 8

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 9

தாதையைத் தாள் அற வீசிய சண்டிக்கவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும்
போனக மும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 10

குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரோடுங் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 11

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனோடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தைஎந் தாய்சுற்றம் முற்றும் எமக்கமு
தாம்எம் பிரான் என் றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேஎன்று
பல்லாண்டு கூறுதுமே. 13

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு நிறைவுற்றது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடல் முதல் குறிப்பு அகராதி

அகலோக மெல்லாம்	51	ஆரே இவைபடுவார்	71
அக்கனா அனைய	31	ஆறாத பேரன்பி	35
அக்கனா அனைய	14	ஆவா இவர்தம்	71
அங்கைகொண்(டு) அமரர்	38	ஆவியின் பரம்என்றன்	68
அணியுமிழ் சோதி	47	இடர் கெடுத் தென்னை	1
அண்டமோர் அணுவாம்	37	இணங்கிலா ஈசன் நேசத்	10
அதிர்ந்த அரக்கன்	63	இத்தெய்வ நெறிநன்	14
அதுமதி இதுவென்(று)	5	இந்திர லோக முழுவதும்	47
அந்திபோல் உருவும்	30	இருந்திரைத் தரளப்	24
அனலமே புனலே	42	இறைவனை என்கதியை	66
அன்ன நடையார்	62	இறைவனை ஏத்துகின்ற	67
அன்னமாய் விசும்பு	36	இலையார் கதிர்வேல்	53
அன்ற ருக்கனைப்	73	இளமென் முலையார்	62
அம்பரா அனலா	32	இவளைவார் இளமென்	19
அம்பலத் தருள்நடம்	68	இவ்வரும் பிறவிப்	22
அம்பளிங்கு பகலோன்பால்	33	உடையும் பாய்புலித்	61
அயர்வுற்(று) அஞ்சலி	73	உண்ணெகிழ்ந்(து) உடலம்	36
அரிவையோர் கூறுகந்தான்	65	உம்பர்நா(டு) இம்பர்	24
அருட்டிரட் செம்பொற்	10	உயர்கொடி யாடை	4
அரும்புனல் அலமரும்	69	உருக்கிஎன் உள்ளத்	11
அரும்பேதைக் கருள்புரியா	35	உருவத்(து) எரியுருவாய்	51
அருளுமா(று) அருளி	45	உறவா கியயோ கமும்போ	7
அருள்செய் தாடுநல்	60	உற்றாய் என்னும் உன்னை	9
அருள்பெறின் அகலிடத்(து)	70	உலகெலாம் தொழவந்(து)	44
அறவ னேஅன்று	73	உளங்கொள மதுரக்	15
அறிவும் மிக்கநன்	61	எங்களை ஆளுடை	70
அற்புதத்தெய்வம்	36	எச்சனைத் தலையைக்	12
அலந்து போயினேன்	60	எட்டுரு விரவி	10
அல்லாய்ப் பகலாய்	62	எண்ணில்பல் கோடி	15
அல்லியம் பூம்பழனத்(து)	51	என்செய்கோம் தோழி	29
ஆசையை அளவறுத்	70	என்னையுன் பாத	32
ஆடர வாட	11	என்னை வலிவாரார்	72
ஆடிவரும் கார்அரவும்	71	எம்பந்த வல்வினை	51
ஆயாத சமயங்கள்	55	எரிதரு கரிகாட்(டு)	48
ஆயிரங் கமலம் ஞாயிறா	14	எழிலையாழ் செய்கைப்	48
ஆரணத்தேன் பருகிஅருந்	35	எழுந்தருளாய் எங்கள்	68
ஆருயிர் காவலிங்(கு)	69	எவரும்மா மறைகள்	45

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகநா யகனை 13
ஏயிவரே வானவர்க்கும் 71
ஏயு மா(று)எழில் 73
ஏர்கொள்கற் பகம்ஒத்(து) 6
ஐயபொட் டிட்ட 36
ஒக்க ஓட்டந்த அந்தியும் 59
ஒட்டா வகைஅவுணர் 71
ஒண்ணுதலி காரணமா 72
ஒருங்கிருங் கண்ணின் 49
ஒளிவளர் விளக்கே 1
ஒழிவொன்றி லாஉண்மை 18
ஓமப் புகையும் அகிலின் 63
ஓவாமுத்தி அஞ்சு 52
கங்கைநீர் அரிசிற் 14
கடியார் கணம்புல்லர் 51
கடுப்பாய்ப் பறைகறங்கக் 8
கடுவினைப் பாசக் 40
கணம்விரி குடுமிச் 22
கணியெரி விசிறு 6
கண்ணியல் மணியின் 39
கண்பனி அரும்பக் 23
கன்னெகா உள்ளக் 31
கரியரே இடந்தான் 25
கருவளர் மேகத் 4
கரைகடல் ஒலியில் 39
கற்றவர் விழுங்கும் 13
கலங்கலம் பொய்கைப் 49
கலைகள்தம் பொருளும் 25
களகமணி மாடம் ல் 51
களிவான் உலகிற் 53
களையா உடலோடு 51
கள்ளவிழ் தாமரைமேற் 65
காடாடு பல்கணம் குழக் 7
காணீரே என்னுடைய 71
காண்பதி யானென்றுகொல் 65
கானே வருமுரண் ஏனம் 7
காமனைக் காலன் 6
காரி கைக்(கு)அரு 73
கித்திநின் றாடும் 30
கிற்போம் எனத்தக்கன் 17
கிளையிளஞ் சேய் அக் 20
குணமணிக் குருளைக் 20
குதிரை மாவொடு தேர்ப 57
குன்றேந்தி கோகன 18
குமுதமே திருவாய் 27
குரவம் கோங்கம் 63
குருண்ட வார்குழற் 57
கூத்தனை வானவர்தங் 66
கேடிலா மெய்ந்நூல் 31
கைக்குவான் முத்தின் 50
கொடியைக் கோமளச் 73
கொழுந்திரள் வாயார் 21
கோல மலர்நெடுங்கட் 65
கோலமே மேலை 2
கோவினைப் பவளக் 19
சடைகெழு மகுடம் 44
சந்தன களபம் துதைந்தநன் 25
சந்தும் அகிலும் தழைப்பீ 62
சரளமந் தார சண்பக 46
சரிந்ததுகில் தளர்ந்தஇடை 35
சலம் பொற் றாமரை 56
சித்தனே அருளாய் 43
சித்தர் தேவர் இயக்கர் 63
சிறப்புடை அடியார் 12
சீரால்மல்கு தில்லைச் 54
சீர்த்ததிண் புவனம் 23
சுருதிவா னவனாம் 37
செக்கர் ஒத்திரவி 12
செங்கணா போற்றி 43
செம்பொனே பவளக் 42
செம்மனக் கிழவோர் 40
செய்ய கோடுடன் கமல 58
செற்று வன்புரந் 58
செழுந்தென்றல் அன்றில்இத் 8
சேடர் உறைதில்லைச் 52
சேயிழை யார்க்கினி 69

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேர்வன் கொ 66
சேவேந்து வெல்கொடி 8
சொன்னவில் முறைநான்(கு) 40
தக்கன்நல் தலையும் 3
தக்கன் வெங்கதிரோன் 15
தத்தையங் கனையார் 37
தனதன்நல் தோழா 2
தனிப்பெருந் தாமே 45
தனியர்ஏத் தனைஓ 46
தன்சோதி எழுமேனித் 34
தன்னக மழலைச் 29
தன்னடி நிழற்கீழ் 13
தம்பானை சாய்ப்பற்றார் 55
தரவார் புனம்சுனை 9
தருணேந்து சேகர 17
தற்பரம் பொருளே 1
தளிரொளி மணிப்பூம் 27
தழைதவழ் மொழுப்பும் 29
தாட்டரும் பழனப் 43
தானமர் பொருது 19
தாயின்நேர் இரங்கும் 22
திக்கடா நினைந்து 26
திசைக்குமிக் குலவு 11
திருநீ றிடாவுருத் 9
திருநுதல் விழியும் 28
திருநெடு மால்இந் 6
திருமகன் முருகன் 42
திருவருள் புரிந்தாள் 39
திறம்பிய பிறவிச் 3
திலக நுதல் 17
தில்லையம் பலத்தெங்கள் 69
துச்சான செய்திடினும் 55
துணுக்கென அயனும் 11
துண்டவெண் பிறையும் 28
துந்துபி குழல்யாழ் 22
தூவி நீரொடு பூவ 59
தெள்ளுநீ றவன்நீ(று) 28
தேய்ந்து மெய்வெளுத் 60
தேர்மலி விழவில் 5
தொடங்கினள் மடல் 21
தொறுக்கள் வான்கம 58
தொழுதுபின் செல்வ(து) 41
தோழியாம்செய்த தொழில் 28
நினைக்கும் நிரந்தர 16
நினைத்தேன் இனி 66
நின்றுநினைந்(து) இருந்து 55
நிறைதழை வாழை 5
நீரணங்(கு) அசும்பு 27
நீரோங்கி வளர்கமலம் 33
நீறணி பவளக் 2
நீலமே கண்டம் 26
நீவாரா தொழிந்தாலும் 34
நெஞ்சிடர் அகல 23
நெடிய சமணும் 64
நெடியா னோடு 54
நெற்றியிற் கண்ணன் 44
நேசமு டையவர்கள் 67
நையாத மனத்தினனை 33
நோக்காத தன்மையால் 72
படங்கொள் பாம்பணை 58
படுமதமு மிடவயிறும் 55
பண்ணிய தழல்காய் 38
பதிகநான் மறைதும் 42
பத்தியாய் உணர்வோர் 50
பந்த பாச மெலாம்அ 57
பந்தமும் பிரிவும் 48
பனிபடு மதியம் 47
பன்நெடுங் காலம் 45
பரிந்தசெஞ் 20
பழையராம் 25
பவளமால் 59
பவளமே மகுடம் 26
பாடகமும் நூபுரமும் 51
பாடலங் காரப் 15
பாந்தள்பூ ணாரம் 41
பாம்பணைத் துயின்றோன் 39

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரோர் முழுதும்	53
பாலும் அமுதமும்	18
பாவார்ந்த தமிழ்மாலை	56
பின்னுசெஞ் சடையும்	24
புனல்பட உருகி	31
புரியும் பொன்மதில்	61
புழுங்குதீ வினையேன்	30
புவனநா யகனே	30
பூத்திரள் உருவம்	23
பூவணங் கோயில்	40
பெரியவா கருணை	41
பெருமையிற் சிறுமை	2
பொசியாதோ கீழ்க்கொம்பு	55
பொய்யாத வேதியர்	16
பொருவரைப் புயத்தின்	5
போழ்ந்தி யானை	57
மங்குல்சூழ் போதின்	46
மங்கையோ டிருந்தே	38
மடங்கலாய்க் கனகன்	3
மண்டலத் தொளியை	13
மண்ணோடு விண்ணளவும்	55
மருண்டுறை கோயில்	21
மறைகளும் அமரர்	3
மாதி மணங்கம	16
மாதொர் கூறன்வண்	73
மானேர் கலைவளை	18
மானைப் புரையும்	53
மாலுலா மனந்தந்	19
மாலோ டயனும்	64
மின்னார் உருவம்	52
முத்தர் முதுபகலே	72
முத்தி யாளர்	52
முத்து வயிரமணி	50
முழுவதும்நீ	34
மூலமாய் முடிவாய்	32
மெய்யரே மெய்யர்க்கு	26
மைஞ்ஞின்ற	34
மையல் மாதொரு	56
மோதலைப் பட்ட	37
யாதுநீ நினைவ(து)	29
வகைமிகும் அசுரர்	20
வண்டார் குழலுமை	8
வரம்பிரி வாளை	4
வாடாவாய் நாப்பிதற்றி	56
வாணு தற்கொடி	72
வான நாடுடை	61
வானவர்கள் வேண்ட	71
வானோர் பணிய	64
வாரணி நறுமலர்	68
வாளாமால் அயன்வீழ்ந்து	56
வாழியம் போதத்(து)	44
விண்ணவர் மகுட	12
விம்மி விம்மியே	73
விரியநீர் ஆலக்	32
வெங்கோல் வேந்தன்	54
வெய்யசெஞ் சோதி	47
வெளியேறு பன்றிப்	7
வேந்தன் வளைத்தது	17
வேறாக உள்ளத்(து)	9
வைத்த பாதங்கள்	60
வையவாம் பெற்றம்	48

திருப்பல்லாண்டு

சேலு லாம்வயல்	72
மன்னுக தில்லை	74
மிண்டு மனத்தவர்	74
நிட்டையி லாஉடல்	74
சொல்லாண்ட சுருதிப்	75
புரந்தரன் மால்	75
சேவிக்க வந்தயன்	75
சேலும் கயலும்	76
சீரும் திருவும்	75
பாலுக்குப் பாலகன்	76
தாதையைத் தாள்	76
குழல் ஒலி யாழ் ஒலி	76
ஆரார் வந்தார் அமரர்	77
எந்தைஎந் தாய்சுற்றம்	77

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்

திருமுறை கண்டெடுத்த 27 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்